Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:12 வள்ளுவர் ஆண்டு 2027 மார்கழி 29 திங்கட்கிழமை (13-01-1997) UTHAYAN A Lively National Tamil Daily கதிர்: 48

# பேச்சுக்கு வருமாறு புலிகளை கூட்டாக அழைக்கவேண்டும்

## கட்சித் தலைவர்கள் யோசனை

கொழும்பு, ஜனவரி 13

**பேச்சுக்கு வருமாறு விடுதலைப் புலிகள் அமைப்பை சகல அரசியல் கட்சிகளும் கூட்டாகக் கோரவேண்டும்.**

**— இவ்வாறு அரசியல் கட்சிகளின் தலைவர்கள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.**

கடந்த 9 ஆம் திகதி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் ஏற்பாடு செய்த விருந்து ஒன்றிலேயே இந்த ஆலோசனை தெரிவிக்கப்பட்டது.

அரசில் அங்கம் வகிக்காத கட்சிகளின் தலைவர்களை இந்த விருந்துக்கு அமைச்சர் பீரிஸ் அழைத்திருந்தார்.

அமைச்சர்கள் அஷ்ரப், தொண்டமான், ஐ. தே. கவின் எம். பிக்களான டிரோன் பெர்னாண்டோ, றொனி டி மெல், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் சிவசிதம்பரம், ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, புளொட் தலைவர் சித்தார்த்தன் ஆகியோர் விருந்தில் கலந்து கொண்ட முக்கியஸ்தர்களாவர். ஐ. தே. க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க விருந்தில் கலந்து கொள்ளவில்லை.

டிரோன் பெர்னாண்டோ, றொனி டி மெல் ஆகியோர் இந்த விருந்தில் பேசுகையில்—

விடுதலைப் புலிகள் இல்லாத தீர்வால் பிரயோசனம் இல்லை; விடுதலைப் புலி

( 8 ஆம் பக்கம் பார்க்க)

## முச்சந்தி முரளி



உது ... வேலியே பயிரை மேஞ்ச கதை கண்டியளோ...!

## செட்டிகுளத்தில் நேற்று 5 படையினர் பலி!

கொழும்பு, ஜன. 13

வவுனியா செட்டிகுளம் பகுதியில் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது நேற்று அதிகாலை 4.30 மணியளவில் விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் 5 படையினர் உயிரிழந்தனர்; 15 படையினர் வரை காயமடைந்தனர்.

புலிகளின் தாக்குதலை படையினர் பதில் தாக்குதல் நடத்தி முறியடித்தனர் என்றும் —

படையினரின் தாக்குதலில் புலிகளுக்கு பலத்த சேதம் ஏற்பட்டது என்றும் —

தாக்குதலின் பின்னர் அப்பகுதியில் இருந்து புலிகளின் சடலம் ஒன்றையும், ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்றையும் படையினர் மீட்டதாகவும் —

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு அறிவித்தது. (உ-4)

## படை வாகனம் தகர்ப்பு: 8படையினர் உயிரிழப்பு

புதுடில்லி, ஜன. 13

யாழ். மாவட்டத்தில் நேற்றுப் பிற்பகல் விடுதலைப் புலிகள் இராணுவ வாகனம் ஒன்றைக் குண்டு வைத்து தகர்த்ததில் 8 படையினர் உயிரிழந்தனர்; 15 படையினர் காயமடைந்தனர்.

கொழும்பில் பாதுகாப்பு அமைச்சு நடவடிக்கைத் தலைமையகம் இதைத் தெரிவித்ததாக இந்தியவானொலி நேற்றிரவு அறிவித்தது.

இந்தச் சம்பவம் எங்கு இடம்பெற்றது என்ற விவரம் இச்செய்தி அச்சுக்கு போகும் வரை தெரியவரவில்லை. (உ-3)

## பரந்தன், ஆனையிறவு மீது தாக்குதல் தொடர்கிறது

கொழும்பு, ஜன. 13

பரந்தன், ஆனையிறவு முகாம்கள் தொடர்பு ஏற்படுத்தப்பட்டு மீண்டும் இணைக்கப்பட்ட பின்னரும் வீதியின் இருமருங்கிலும் — கிழக்கு, மேற்கு பக்கங்களில் இருந்து — விடுதலைப் புலிகள் மோட்டார் தாக்குதலை நடத்துகிறார்கள் என்று கொழும்பு பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

பெரியமுகாமான பரந்தன் இராணுவ முகாம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல், புலிகள் வேறு முகாம்கள் மீது தாக்குதல் நடத்தலாம் என்பதையே காட்டுகிறது என்றும் —

பரந்தனில் இராணுவத்துக்கு தோல்வி என்று கூற முடியாது என்றும் —

இரு தரப்பிலும் பலத்த இழப்பு ஏற்பட்டுள்ளது என்றும் —

அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது. (உ-3-150)

## விசாரணைக் குழு நியமனம்

கொழும்பு,ஜன.13

பரந்தன் – ஆனையிறவு முகாம்கள் மீது கடந்த வியாழன் அதிகாலை நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து விசாரணை நடத்த குழு ஒன்றை இராணுவத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் றோஹான் தளுவத்த நியமித்துள்ளார்.

இந்த முகாம்கள் தாக்கப்பட்ட முறை, மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள், இழப்புக்கள் ஆகியவை குறித்து இந்தக் குழு ஆராயும் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## வன்னியில் அஞ்சலி

மாங்குளம் ஜன. 13

ஆனையிறவு, பரந்தன் சமரில் உயிரிழந்த 140 விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு விடுதலைப் புலிகளின் மாவீரர் வணக்க மரியாதைகளோடு நேற்று வன்னிப் பகுதியில் நல்லடக்கம் நடந்ததாகச் செய்திகள் தெரிவித்தன.

வன்னிப் பகுதி முழுவதும் புலிகளின் சிவப்பு, மஞ்சள் வர்ணக் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தன என்றும்—

போராளிகளின் தியாகத்தையும் நினைவையும் அஞ்சலி செய்யும் பாடல்கள் பல இடங்களில் ஒலிபரப்பப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (உ-4)

## பயணிகள் வரவில்லை

பரந்தன் முகாம் தாக்குதலையடுத்து கடந்த மூன்று நாள்கள் பொது மக்கள் எவரும் ஓமந்தைப் பகுதியில் இருந்து வவுனியாவுக்குள் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை வவுனியாவில் இருந்து வடக்கே பயணிகள் செல்ல படையினர் அனுமதித்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

## முறைகேட்டில் ஈடுபட்ட இராணுவ அதிகாரி!

### ஒழுக்காற்றுக்கு பொறுப்பானவராம்

கொழும்பு, ஜன. 13

இராணுவத்தினரின் ஒழுங்காற்று நடவடிக்கைகளுக்குப் பொறுப்பான இராணுவ சிரேஷ்ட பிரிகேடியர் ஒருவர் இராணுவத் தலைமையக தளபாட உற்பத்தி தொழில் சாலையில் இருந்து தமது வீட்டுக்குத் தேவையான தளபாடப் பொருள்களை அனுப்பி வைத்த சமயம் வகையாக மாட்டிக் கொண்டார்.

இப்படியான சம்பவம் ஒன்று கடுகண்ணாவையில் இடம் பெற்றுள்ளது. இது பற்றிக் கூறப்படுவதாவது:-

இராணுவத்தினர் மேற்கொள்ளும் முறைகேடுகள் குறித்து ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு பொறுப்பாக இராணுவ சிரேஷ்ட பிரிகேடியர் ஒருவர் பணியாற்றி வந்தார்.

கொழும்பில் உள்ள இராணுவத் தலைமையகத்தில் உள்ள மரத்தளபாடத் தொழிற்சாலையில் செய்த கதிரை, நிலைகள் போன்றவற்றை இவர் கண்டியில் உள்ள தமது வீட்டுக்கு கொண்டு செல்லவிருந்தார்.

இது குறித்து தகவல் கிடைத்ததையடுத்து இராணுவத் தளபதி றோஹான்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## விடுதலைப் புலிகள் ஒப்படைத்த 27 சடலங்களை ஏற்பதற்கு மறுப்பு

லண்டன், ஜன. 13

ஆனையிறவு, பரந்தன் தாக்குதலில் உயிரிழந்த 27 படையினரின் சடலங்களை விடுதலைப் புலிகள் என்னிடம் ஒப்படைத்தனர். ஆனால் வவுனியாவில் அவற்றைப்பொறுப்பேற்க இராணுவத்தினர் மறுத்து விட்டனர்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் வவுனியா கிளைச் செயலாளரும், செஞ்சிலுவைச் சங்கத்தின் வடக்கு - கிழக்கு இணைப்பாளருமான சிவநாதன் கிஷோர் நேற்று பி. பி. ஸிக்கு அளித்த பேட்டியில் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:-

படையினரின் சடலங்களை வந்து பொறுப்பேற்குமாறு புலிகள் எனக்கு அனுப்பிய தகவல் ஓமந்தை செஞ்சிலுவைக் கிளைத் தலைவர் மூலம் எனக்குக் கிடைத்தது. நான் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டேன். சட

(8ஆம் பக்கம் பார்க்க)

## கௌடாவின் உயிருக்கு புலிகளால் ஆபத்தாம்!

கொழும்பு, ஜன. 13

இந்தியப் பிரதமர் தேவ கௌடாவின் உயிருக்கு விடுதலைப் புலிகளால் ஆபத்து இருப்பதாக கிடைத்த புலனாய்வுத் தகவல்களையடுத்து அது தொடர்பான உஷார் நடவடிக்கைகளை எடுப்பதற்கு பெங்களூரில் உயர்மட்ட மாநாடு ஒன்று மூன்று நாள்கள் இடம்பெற்றது.

பொலீஸ் ஆணையாளர்கள், பொலீஸ் அதிகாரிகள் கலந்து கொண்ட இந்த மாநாட்டில், முன்னெச்சரிக்கையாக எடுக்கப்பட வேண்டிய விடயங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

கர்நாடகத்தில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் இல்லாத போதும், அங்கு புலிகளின் நடவடிக்கைகளை

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## ஈழத் தமிழர் மாநாடு: சென்னையில் ஏற்பாடு

சென்னை, ஜன. 13

இலங்கைத்தமிழர் நிலையை சர்வதேசத்துக்கு எடுத்துக் கூறும் வகையில் பெரிய மாநாடு ஒன்று சென்னையில் அடுத்த மாதம் 2 ஆம் திகதி நடைபெறும் என பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் ராமதாஸ் அறிவித்துள்ளார்.

1980 களில் ஆரம்பத்தில் ரெலோ ஆதரவுடன் கருணாநிதி நடத்திய ஈழத் தமிழர் மாநாடு போன்று இந்த மாநாடும் பெரிய அளவில் நடைபெறும் என்றும் அவர் கூறினார்.

இலங்கைத் தமிழர் விடயத்தில் தமிழக முதல்வர் கருணாநிதி உறுதியான

( 8 ஆம் பக்கம் பார்க்க )

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## கந்தையா தாமோதரம்பிள்ளை

தாவடி தெற்கைச்சேர்ந்த கந்தையா தாமோதரம்பிள்ளை 12-01-97 அன்று காலமானார்.

அன்னார் விசாலாட்சியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற சண்முகராசா, திருமதி கமலாநேரு சிவானந்தன், கனகராசா (கனடா), திருமதி இந்திராணி பாலச்சந்திரன் (ஆசிரியை, தாவடி இ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத்தந்தையும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று அவரது தாவடி இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10-00 மணிக்கு தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இந்திராணி
(மகள்)

தாவடி தெற்கு,
கொக்குவில்.

(44667)

## சின்னப்பொடி வேலுப்பிள்ளை

காரைநகர் கள்ளித்தெரு மேற்கைச் சேர்ந்த சின்னப்பொடி வேலுப்பிள்ளை கோணாவிலில் (8-1-97) அன்று காலமானர்.

அன்னார் காலஞ்சென்ற நாகம்மாவின் அன்புக் கணவரும், புவனேஸ்வரி, இராஜேஸ்வரி ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், சண்முகம், நாகலிங்கம் ஆகியோரின் மாமனாரும், சிவகுமார் (கொழும்பு), சிவசுப்பிரமணியம் (இத்தாலி), நாகேஸ்வரி (புத்தளம்), கனகேஸ்வரி, சுந்தரரேஸ்வரி (சுவிஸ்), சுந்தரமூர்த்தி, சுந்தரசிவம் (சுவிஸ்), மங்கையர்க்கரசி (சுவிஸ்), யோகேஸ்வரி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கோணாவிலில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
நாகலிங்கம் இராஜேஸ்வரி
(மகள்)

37, செல்லர் வீதி,
நல்லூர்.

(44659)

## திருமதி செல்லத்துரை சின்னம்மா

துன்னாலை கிழக்கைச் சேர்ந்த செல்லத்துரை சின்னம்மா காலமானார்.

அன்னார்காலஞ்சென்றதம்பையா செல்லத்துரையின் அருமை மனைவியும், பாலசுப்பிரமணியம் (கனடா), சிவசுப்பிரமணியம் (மதிப்பீட்டுத் திணைக்களம், கொழும்பு), பரமேஸ்வரி ஆகியோரின் அருமைத் தாயாரும், வே. தியாகராசா (ஆர். எம். பி.), பரமேஸ்வரி (கனடா), புவனாதேவி ஆகியோரின் மாமியாரும், தியாகேஸ்வரன் (கனடா), இராஜேஸ்வரன் (கனடா), மீரா (கனடா), வத்சலா (கனடா), சிவதேவி, சித்தார்த்தன், சுரேந்திரன், உமாசுதன், அதிருபன் ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று திங்கட்கிழமை (13 - 01 - 1997) அன்னாரது இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
செ. சிவசுப்பிரமணியம்
(மகன்)

துன்னாலை தெற்கு,
கவெட்டி.

(சி/ 3917)

## திருமதி புண்ணியமூர்த்தி தங்கம்மா

கரம்பகத்தைச் சேர்ந்த திருமதி தங்கம்மா கொடிகாமத்தில் (11-01-97) வெள்ளிக்கிழமை சிவபதம் அடைந்தார்.

இவர் காலஞ்சென்ற கனகசபை புண்ணியமூர்த்தியின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற ஐயம்பிள்ளை கந்தையாவின் அன்புச் சகோதரியும், மகேஸ்வரி, அருணாசலம், சரவணமுத்து, கனகம்மா (ஆசிரியை, திருநாவுக்கரசு ம. வி.), பரமேஸ்வரி (ஆசிரிய ஆலோசகர், சாவகச்சேரி கல்விக் கோட்டம்) திருவாதவூரர் (காசாளர், ப நோ. கூ. ச., கொடிகாமம்), மாணிக்கவாசகர் ஆகியோரின் அன்புத் தாயாரும், செல்லையா, அருணாசலம் (இளைப்பாறிய அதிபர்), சுந்தரலிங்கம் (கண்ணாடித் தொழிற்சாலை), மகேஸ்வரி, அன்னலெட்சுமி, ஜெயரஞ்சிதம், இராசமணி ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவப்பிரகாசம், மகாலக்குமி (ஆசிரியை, கொடிகாமம் திருநாவுக்கரசு ம. வி.) அருந்ததி, சோதி, தேவகி, தவா (சவூதி), அகிலா, அகிலதாஸ் (அதிபர், கச்சாய் அ. த. க. பா.), சாந்தி, கமலா, துரை, தாசன் (சுவிஸ்), புஷ்பன் (அமுத சுரபி, யாழ்.), ஈசு, சசி, சியா (ஆசிரியை, கச்சாய் அ. த. க. பா.), சுதன், செந்தூர் (ஜேர்மனி), சபேசன், கோடீஸ்வரன், (உரிமையாளர், சிறிறங்கா, யாழ்.), கோமதி, செந்தா (மாணவி), ஜெகன் (சவூதி), கோபி (மாணவன், சென். அந்தனி), குளோறி (மாணவி, உயர்தர பாடசாலை, கண்டி), சறோஜினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (12-1-97) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கட்டைபறிச்சான் மயானத்தில் நடைபெற்றன. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி ப சுந்தரலிங்கம்.

ஸ்ரேசன் றோட்,
கொடிகாமம்.

(44658)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம், ஜன. 13

நல்லூர் ஸ்ரீ சந்திரசேகர் விநாயகர் ஆலயத்தில் நாளை காலை 9.00 மணிக்கு கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், வாஸ்து சாந்தி, யாகபூசை, யாகங்கள் இடம்பெறவுள்ளன.

புதன்கிழமை காலை 9.30 மணி முதல் 10.30 மணிவரை அந்தரீத பிரதிஷ்டா மகாகும்பாபிஷேகம் இடம் பெறும். (உ-5)

★ ★ ★

யாழ். வண். வடகிழக்கு கொண்டலடி விநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று நண்பகல் 12.00 மணிக்கு இடம்பெறும் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. இம்மாதம் 21 ஆம் திகதி தேர்த்திருவிழாவும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (அ)

★ ★ ★

கோண்டாவில் தில்லையம்பதி ஸ்ரீ சிவகாமி கோயிலில் நாளை காலை 6.00 மணிக்கு சங்கிராதி தைப்பொங்கல் உற்சவமும், விசேட அபிஷேக ஆராதனைகளும் நடைபெறும். (அ-30)

★ ★ ★

எழுதுமட்டுவாள் விழுபனை கண்ணகை அம்பாள ஆலய மகா சங்காபிஷேகம் புதன்கிழமை நடைபெறும். காலை 7.00 மணிக்கு கிரியைகள் ஆரம்பமாகும். (அ-117)

## விலைப்பட்டியல் பார்வைக்கு

தென்மராட்சி, ஜன. 13

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் வேண்டுகோளுக்கிணங்க சாவகச்சேரி நகர்ப்பகுதியில் உள்ள வர்த்தக நிலையங்களில் பொருள்களின் விற்பனவு விலைப்பட்டியல் கடைகளின் முன்னால் வைக்கப்பட்டுள்ளது. (உ-117)

## மீண்டும் பழைய இடத்தில்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். போதனா வைத்திய சாலையில் சத்திரசிகிச்சை— அதிதீவிர சிகிச்சைப் பிரிவும், சத்திரசிகிச்சை வார்ட்டும் மீண்டும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளன.

கடந்த கால இராணுவ நடவடிக்கையின் போது பலத்த சேதமடைந்திருந்த இப் பகுதிகள் புனரமைக்கப்பட்டு சில தினங்களுக்கு முன்னர் சம்பிரதாயப்படி திறந்து வைக்கப்பட்டன.

இதே வேளை ஆஸ்பத்திரி சமையல்பிரிவும் பழைய இடத்தில் இயங்க ஆரம்பித்துள்ளது. (உ-15)

## கலப்பட நல்லெண்ணெய் கண்டுபிடிப்பு

சண்டிலிப்பாய், ஜன. 13

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவைச் சேர்ந்த பொது சுகாதார பரிசோதகர்கள் குழுவொன்று கடந்த வாரம் மானிப்பாய் சந்தைப் பகுதியிலுள்ள கடைகளில் திடீர் சோதனை மேற்கொண்ட போது கலப்படம் செய்யப்பட்ட நல்லெண்ணெய் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

பொதுமக்கள் அன்றாடம் பயன்படுத்தும் நல்லெண்ணெயில் கலப்படம் செய்வது அதிகரித்திருப்பதை அடுத்தே இது போன்ற சோதனை [illegible] வருவதாக பொது சுகாதார பரிசோதகர் ஒருவர் தெரிவித்தார். (உ-135)

# அஷ்ரப்பைக் கொல்ல புலிகள் திட்டமாம்!

கொழும்பு, ஜன. 13

புனர்வாழ்வு, புனரமைப்பு, கப்பல்துறை அமைச்சர் எம். எச். எம். அஷ்ரப்பைக் கொல்ல விடுதலைப் புலிகள் திட்டமிட்டுள்ளதாகக் கிடைத்த புலனாய்வுத் தகவல்களையடுத்தே அமைச்சர் பொது நிகழ்ச்சிகளிலும், தனிப்பட்ட நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்வதை நிறுத்தியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது.

அமைச்சர் அஷ்ரப்பின் 'செலூலர்' தொலைபேசி மூலம் அவருடன் தொடர்பு கொண்ட போது, அவரது மெய்ப்பாதுகாவலரே பதில் அளித்தார் என்றும் —

பாதுகாப்புக் காரணங்களுக்காக அவர் தொலைபேசியில் பேசுவதையும் நிறுத்தியுள்ளார் என்று கூறப்பட்டது என்றும் —

கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன. (உ-3-150)

# தமிழக மீனவர்கள் உண்ணாவிரதம்

சென்னை, ஜன. 13

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்படுவதைக் கண்டித்து நெல்லை, கன்னியா குமரி, சிதம்பரனார் மாவட்ட மீனவர்கள் திருநெல்வேலிச் சந்தியில் பாரதியார் சிலை முன்பாக நேற்று உண்ணாவிரதம் இருந்தனர். அடையாள எதிர்ப்பு நடவடிக்கையாக இது மேற்கொள்ளப்பட்டது.

அதேவேளை —

இராமேஸ்வரம் கடற்பகுதிகளில் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை தடுக்கவும், சரியான கடற் பாதையை மீனவர்களுக்குக் காட்டவும் ஐந்து கோடி ரூபா செலவில் அதி நவீன ரோந்துப் படகுகள் வடிவமைக்கப்பட்டு வருவதாக மாநில மின்வளத் துறை அமைச்சர் திருமதி ஜெனிபர் சந்திரன் தெரிவித்தார். (உ-3)

# காரைநகரில் 2 இளைஞர்கள் படையினரின் சூட்டுக்குப் பலி!

கடற்படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தாகத் தெரிவித்து இரண்டு இளைஞர்களின் சடலங்கள் நேற்று காரைநகர் பொலீஸாரினால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப் பட்டன.

காரைநகர் கடற்கரையோரப் பகுதியில் இரவு 10 மணிக்கு காணப்பட்ட இந்த இரு இளைஞர்களும், கடற்படையினர் கண்டு கூப்பிட்ட போது ஓட முற்பட்டதாகவும் —

அவ்வேளையே கடற்படையினர் இவர்களை நோக்கிச் சுட்டதாகவும் —

பொலீஸரால் தெரிவிக்கப்பட்டது.

இருவரினதும் தலைகளில் துப்பாக்கிச்சூட்டுக் காயம் காணப்பட்டது.

நேற்று முன்தினம் இரவு 10 மணிக்கு இடம் பெற்ற இச்சம்பவத்தில் காரைநகர் பறையாண்டிப்பகுதியைச் சேர்ந்த சோமசுந்தரம் சிவகுமார் (வயது 22), காரைநகர் பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த தேவராசா விக்கினேஸ்வரன் (வயது 22) ஆகிய இருவருமே மரணமானவர்களாவர்.

சடலங்கள் மரண விசாரணைக்காக ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப் பட்டுள்ளன. (உ-15)

# நன்றி நவிலல்

என் நாமத்தினால் கேட்டதெல்லாம் "தருவேன்" என வாக்களித்த யேசுவின் திருஇருதயத்திடம் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலராம் புனித யூதா ததேயுவின் பரிந்து வேண்டுதலால் நான் கேட்ட விண்ணப்பம் கிடைக்கப்பெற்றேன். அவர் நாமம் என்றும் புகழப்படுவதாக!

ஓர் அடியான்

கரவெட்டி.

(சி/3918)


## St. PETER'S TRIMMER HALL NURSERY

பரி. பேதுரு றிம்மர் மண்டபம்
பாலர் பாடசாலை

ஆரம்பம்: 15 - 01 - 1997 காலை 9 மணி
இடம்: 129, 2ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்

## St. PETER'S KILNOR HALL NURSERY

பரி. பேதுரு கில்னர் மண்டபம்
பாலர் பாடசாலை

ஆரம்பம்: 15 - 01 - 1997 காலை 9 மணி
இடம்: கில்னர் மண்டபம்

முகாமைக் குரு,
யா/மெதடிஸ்த சேகரம்.

(44660)

## ST. PETER'S SPEECH & ELOCUTION CLASSES

WILL BEGIN ON
SATURDAY THE 18th JANUARY '97
at 3.30 P. m. ( New time )
AT
TRIMMER HALL

Conducted by qualified and able Teachers,

Fees per term: Rs 150.00
Admission fees: Rs 50.00

The Suprintendent Minister,
Jaffna Methodist Circuit.

(44661)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

# ஹெப்ரோன் விவகாரம் சம்பந்தமான பேச்சுக்களில் முன்னேற்றம் இல்லை

கெய்ரோ, ஜன. 13

ஹெப்ரோனில் இருந்துஇஸ்ரேலிய படைகள் விலகி அதனை பாலஸ்தீன சுயாட்சி அதிகார அமைப்பிடம் ஒப்படைப்பது குறித்து எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் நடந்த பேச்சு வார்த்தையிலும் முன்னேற்றம் ஏற்படவில்லை.

எகிப்து அதிபர் முபராக், பாலஸ்தீன அதிபர் அரபாத், அமெரிக்க சிறப்புப் பேச்சாளர் டனிஸ் ஜோசி ஆகியோர் தங்களுக்கிடையே தனித்தனியாகப் பேச்சுக்களை நடத்தினார்கள்.

இந்தப் பேச்சுக்கள் சுமார் நான்கு மணி நேரம் இடம் பெற்றன.

இந்தப் பேச்சுக்களில் பொதுவான நிலை எதுவும் எட்டப்படவில்லை.

இதற்கிடையே ஜோர்தான் மன்னர் ஹுசைன் பாலஸ்தீன அதிபர் அரபாத்தைச் சந்திக்க நேற்று காஸாவிற்கு சென்றார்.

அப்பகுதியை 1967 ஆம் ஆண்டு மத்திய கிழக்குப் போரின் போது இஸ்ரேல் கைப்பற்றியபிறகு இப்போதுதான் அவர் அங்கு செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-3)

## இந்தியாவுக்கு ரஷ்ய நீர்மூழ்கிக்கப்பல்

புதுடில்லி, ஜன. 13

ரஷ்யாவிடமிருந்து இந்தியா நீர் மூழ்கிக் கப்பல்களை வாங்கத் தீர்மானித்துள்ளது.

ஜேர்மனியின் உரிமம் பெற்று மேலும் 2 தாக்குதல் நீர்மூழ்கிக் கப்பல்களை இந்தியாவிலேயே உருவாக்கவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நீர் மூழ்கிக் கப்பல்கள் எதிரியின் நீர் மூழ்கிக் கப்பல்களைத் தேடி அழிக்கும் திறன் கொண்டவையாக இருக்கும். (இ-10)

## அமெரிக்காவில் கடும் குளிர்

அமெரிக்காவின் மத்திய பகுதியில் கடும்குளிர் நிலவுவதாக அறிவிக்கப்படுகின்றது.

கடந்த வியாழக்கிழமையில் இருந்து இந்தக்குளிருக்கு 31 பேர் இறந்துள்ளனர்.

தென். அக்கோடா நகரத்தில் நெருக்கடி நிலை அறிவிக்கப்பட்டுள்ளது. அங்கு 5 அடிக்கு பனிக்கட்டி சேர்ந்திருப்பதால் போக்கு வரத்தும் தடைப்பட்டது. (உ-3)

## ஹொங்கொங் தீவு கையளிப்பு வைபவத்தில் வேல்ஸ் இளவரசர்

ஹொங்கொங் தீவு சீனாவிடம் கையளிக்கப்படும் நிகழ்ச்சியில் வேல்ஸ் இளவரசர் பங்குபற்றுவார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

150 ஆண்டுகளாக பிரிட்டனின் நிர்வாகத்தின் கீழ் இருந்து வந்த ஹொங்கொங் தீவு இவ்வாண்டு ஜுன்30ஆம் திகதி நள்ளிரவில் இருந்து சீனாவிடம் கையளிக்கப்படவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரிட்டிஷ் மகாராணியின் சார்பில் வேல்ஸ் இளவரசர் பங்குபற்றவுள்ளார் என பக்கிங்காம் மாளிகை அறிக்கைகள் தெரிவித்துள்ளன. (இ-10)

## ஜெயலலிதாவை விசாரிக்க தனி நீதிமன்றம்

முன்னாள் முதலமைச்சர் செல்வி ஜெயலலிதாவுக்கு எதிரான குற்றச் சாட்டுகள் குறித்து விசாரிக்க தனி நீதிமன்றம் அமைக்கப்படும் என்று தமிழக முதல்வர் கருணாநிதி தெரிவித்தார்.

இவர் மீதான குற்றப்பத்திரிகைகள் தாக்கலான பின்னர் இந்த நீதிமன்றம் உருவாக்கப்படும் என்றும் முதலமைச்சர் கூறினார்.

## பெருவில் சிக்குண்டுள்ள பணயக் கைதிகள் விவகாரம்: பேச்சு மூலம் தீர்வு கிட்டும்?

பெருவின் தலைநகர் லீமாவில் ஜப்பானிய தூதரகத்துக்குள் 74 பேர் தொடர்ந்து பணயம் வைக்கப்பட்டிருக்கும் விடயத்தில் பேச்சு மூலம் தீர்வு ஏற்படுவதற்கான வாய்ப்புகள் உள்ளன என்ற நம்பிக்கை தற்போது தோன்றியுள்ளது.

சுமார் ஒருமாத காலமாக இந்தப் பணயக் கைதிகள் விவகாரம் இழுபட்டு வருகின்றது.

இரு வாரங்கள் தடைப்பட்டிருந்த பேச்சில் நேற்று முக்கிய முன்னேற்றம் ஏற்பட்டது.

வானொலி மூலம் தொடர்பு கொண்ட அரசாங்கப் பேச்சாளரும், பணயக் கைதிகளைப் பிடித்துவைத்திருக்கும் கிளர்ச்சிப்படைத்தளபதியும் வார இறுதியில் நேருக்குநேர் சந்திக்க இணங்கினர்.

இந்த விடயத்தில் நடுவராகப் பணியாற்றும் கத்தோலிக்க பாதிரியார் பணயக் கைதிகளை நேரில் சந்தித்துப் பேசவும் அனுமதிக்கப்பட்டிருக்கின்றது. (உ-3)

## தென்கொரிய வேலை நிறுத்தம்

அனைத்துலக தொழிலாளர் நிறுவனத்தின் தலைமை இயக்குநர் மைக்கல் ஹான்சன், தென்கொரியாவில் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள தொழிற்சங்க வாதிகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டாம் என தென்கொரிய அதிபரைக் கேட்டுள்ளார்.

## உலக அரங்கில்

தென்கொரிய அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சட்டபூர்வமான தொழிற்சங்க உரிமைகளை மதித்து நடக்குமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

கடந்தமாதம் தென்கொரியாவில் நிறைவேற்றப்பட்ட சர்ச்சைக்குரிய தொழிலாளர் சட்டம் தொழிலாளர்களை இலகுவாக ஆள்குறைப்புச் செய்ய வகை செய்கிறது. (இ-10)

## சுட்டுக் கொலை

மத்திய ஆபிரிக்க நாடான புறூண்டியில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு காவல் முகாம் ஒன்றில் இருந்து தப்பிச்செல்ல முயன்றதாகக் கூறப்படும் 126 ஹுட்டு இன அகதிகளை ருட்சி இனத்தவர் ஆதிக்கம் செலுத்தும் இராணுவம் சுட்டுக் கொன்றிருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

# இலங்கைப் பிரச்சினையில் இந்தியா தலையிடுவதற்கு வாய்ப்பு இல்லை

## அமைச்சர் சிதம்பரம் கூறுகிறார்

சென்னை, ஜன. 13

''இலங்கைப் பிரச்சினையைப் பொறுத்த வரையில் தற்போதைய நிலையில்மறைமுகமாகவோ, நேரடியாகவோ மத்திய அரசு தலையிடுவதற்கு பெரிய வாய்ப்புக்கள் இல்லை.''

இவ்வாறு இந்திய மத்திய நிதி அமைச்சர் பா. சிதம்பரம் தெரிவித்தார்.

'அகதிகளாக வந்தவர்களுக்கு அடைக்கலம் தந்து அவர்களை திருப்பி அனுப்புவதுதான் தற்போதைய கொள்கை.

விடுதலைப்புலிகளின் மனப்போக்கு என்னவென்பது திட்டவட்டமாக தெரியும் வரை எந்தவித யோசனையையும் இந்தியா கூறமுடியாது.

இலங்கைத்தமிழர் சம்பந்தப்பட்ட ஓரிருசம்பவங்கள் நடைபெற்றிருக்கலாம். ஆனால் அவை பெரிதாகவும் இல்லை; புதியதாகவும் இல்லை.

மாநில அரசும், மத்திய அரசும் மிகுந்த கவனத்துடன் நாள்தோறும் இதுகுறித்து கண்காணிப்பாக இருக்க வேண்டும்'- இவ்வாறு அமைச்சர் சிதம்பரம் மேலும் கூறினார். (உ-3)

# கச்சதீவு ஒப்பந்தத்தை மறு பரிசீலனை செய்க!

## கருணாநிதி கோரிக்கை

சென்னை, ஜன. 13

''கச்சதீவை இலங்கைக்கு வழங்கிய ஒப்பந்தத்தின் சரத்துக்களை இந்தியா மறுபரிசீலனை செய்ய வேண்டும்.''

தமிழக முதல்வர் மு. கருணாநிதி இவ்வாறுகோரியிருக்கின்றார்.

இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற் படையினரால் தாக்கப்படுவது பற்றிய செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

கச்சதீவில் தங்கி மீன் பிடிக்க தமிழக மீனவர்களுக்கு இந்த ஒப்பந்தம் வகை செய்கிறது என்று அவர் சுட்டிக் காட்டினார்.

இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம் புதுடில்லி வந்திருந்த போது இப்பிரச்சினையை மத்திய அரசு அவரது கவனத்துக்கு கொண்டு வந்தது என்றும் அவர் குறிப்பிட்டார். (உ-3)

# கச்சதீவு ஒப்பந்த சரத்துகளை கைவிடுக!

## வீரமணி கோருகிறார்

புதுடில்லி, ஜன. 13

கச்சதீவு அருகே பாக்கு நீரிணைப் பகுதியில் இந்திய மீனவர்கள் மீன்பிடிப்பதற்குத் தடைசெய்யும் 1976 ஆம்ஆண்டின் ஒப்பந்தத்தின் சரத்துக்களை கைவிட வேண்டும் என்று இந்திய வெளியுறவுஅமைச்சர் இந்திரகுமார் குஜ்ரால் அடுத்த வாரம் கொழும்பு செல்லும் போது இலங்கை அரசை வலியுறுத்த வேண்டும்.

— திராவிடக்கழகப் பொதுச் செயலாளர் வீரமணி இவ்வாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்திய மீனவர்கள் மீதுஇலங்கைக் கடற்படை நடத்திவரும் தாக்குதலை முழுமையாக நிறுத்துவதற்கு இது ஒன்றுதான் சிறந்த வழி என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இது குறித்து தமிழக முதலமைச்சரும் மத்திய அரசில் அங்கம் வகிக்கும் தமிழக அமைச்சர்களும் மத்திய அரசை வலியுறுத்த வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார். (உ-5)

## ஐ. தே. கவின் எம். பிக்களும் ராஜினாமா!

கொழும்பு, ஜன. 13

பௌத்தசாசன அமைச்சின் ஆலோசனை சபையில் இருந்து அஸ்கிரிய, மல்வத்தை மகாநாயக்கர்கள் ராஜினாமாச் செய்ததைத் தொடர்ந்து, அச்சபையில் அங்கம் வகித்த ஐ. தே. கவின் ஆறு எம். பிக்களும் ராஜினாமாச் செய்துள்ளனர்.

பௌத்த சிங்கள மக்களுக்கு எதிராக நடைபெறும் பல்வேறு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த இந்தச்சபை [illegible] அவர்கள் தெரிவித்துள்ளனர். (உ-150-3)

# நான்கு பாடசாலைகள் பளையில் மூடப்பட்டன

## பெற்றோர் ஆட்சேபம்

தென்மராட்சி, ஜன. 13

பளைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த நான்கு பாடசாலைகள் யாழ். கல்வித் திணைக்களத்தினால் மூடப்பட்டு அவை ஏனைய பாடசாலைகளுடன் தற்காலிகமாக இணைக்கப்பட்டுள்ளன.

இயக்கச்சி அ.த.க. பாடசாலை, கோவில் வயல் அ.த.க. பாடசாலை, பேராலை அ.த.க. பாடசாலை, அல்லிப்பளை அ. த. க. பாடசாலை ஆகியவையே தற்காலிகமாக மூடப்பட்டவையாகும்.

இயக்கச்சி அ.த.க. பாடசாலை வேம்போடு கேணி சீ.சீ.த.க. பாடசாலையுடனும், கோவில்வயல் அ.த.க. பாடசாலை முகமாலை றோ. க. பாடசாலையுடனும், பேராலை அ. த. க. பாடசாலை பளை மத்திய கல்லூரியுடனும், அல்லிப்பளை அ.த.க. பாடசாலை புலோப்பளை றோ. க. பாடசாலையுடனும் இணைக்கப்பட்டுள்ளன.

மூடப்பட்ட பாடசாலைகளில் பணியாற்றிய ஆசிரியர்கள், ஆசிரிய பற்றாக்குறையுள்ள வேறு பாடசாலைகளுக்கு இடமாற்றம் செய்யப்படக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதற்கிடையில் — நான்கு பாடசாலைகள் மூடப்பட்டதை ஆட்சேபித்து இப்பாடசாலை மாணவர்களின் பெற்றோர் கல்வித் திணைக்களத்திற்கும் பளை பிரஜைகள் குழுவுக்கும் மகஜர்களை அனுப்பியுள்ளனர்.

1990 இல் இரண்டாம் ஈழ யுத்தம் அரம்பிக்கப்பட்டதையடுத்து இப்பாடசாலைகள் பளையில் தற்காலிக கொட்டகைகளில் இயங்கி வந்தன.

கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தின் கீழ் இயங்கி வந்த இப்பாடசாலைகள் அண்மையில் யாழ். கல்வித் திணைக்கள நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-117)

# கணனி பயிற்சி நிலையம் விரைவில் யாழ்ப்பாணத்தில்!

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ்ப்பாணத்தில் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்று அடுத்தமாத நடுப்பகுதியில் இருந்து இயங்கவிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் அமையவிருக்கும் கணனிப் பயிற்சி நிலையத்துக்கு தேவையான உபகரணங்கள் கொழும்பில் தயாராக விருப்பதாகவும்—

அவை விரைவில் இங்கு எடுத்துவரப்படும் என்றும்—

தொழிற்பயிற்சி அதிகார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியா, திருமலை கணனி நிலையங்களில் பயிற்சி பெறுவதற்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்களில் இருந்து இந்த நிலையத்துக்கு பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இம்மாதம் 30ஆம் திகதி வவுனியா கணனி நிலையம் திறக்கப்படவிருக்கிறது.

இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சியாளர்களாக வவுனியாவைச் சேர்ந்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப்படவிருப்பதாகவும்—

அரச தனியார் நிறுவன அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு சனி, ஞாயிறு தினங்களில் இந்நிலையத்தில் பயிற்சி அளிக்கப்படும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

திருகோணமலை கணனி பயிற்சி நிலையம் அடுத்த மாத நடுப்பகுதியில் இயக்க ஆரம்பிக்கும் என்றும் தெரிய வந்தது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண

# சர்வோதயத் தலைவர் ஆரியரத்னா யாருடனும் சென்றுபேசத் தயாராம்!

கொழும்பு, ஜன 13

நாட்டின் அழிவுக்குக் காரணமான இனப்பிரச்சினைக்குத்தீர்வுகாண்பதற்கு —மக்களுக்கு அமைதி வாழ்வும் சமாதானமும் கிட்டுவதற்கு — யாருடனும் சென்று பேச்சு நடத்துவதற்குத் தயாராக இருக்கிறேன், சர்வோதய இயக்கத் தலைவர் கலாநிதி ஆரியரத்ன இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.

இந்திய அரசினால் 1996 ஆம் ஆண்டிற்கான சாந்தி சமாதானப் பதிவு கலாநிதி ஆரியரத்னாவுக்கு வழங்கப்பட்டதை ஒட்டி அவரை வரவேற்று பாராட்டி கௌரவிக்கும் நிகழ்ச்சி ஒன்று நேற்று முன்தினம் கொழும்பு பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது. அங்கு தமக்கு அளிக்கப்பட்ட கௌரவத்துக்குப் பதிலளித்துப் பேசுகையிலேயே யாருடனும் சென்று பேச்சு நடத்துவதற்குத் தாம் தயாராக இருப்பது குறித்து ஆரியரத்னா பிரஸ்தாபித்தார்.

இந்திய - இலங்கை நட்புறவுக் கழகமும் சர்வோதய இயக்கமும் இந்த வரவேற்பு நிகழ்ச்சியைக் கூட்டாக ஏற்பாடு செய்திருந்தன.

நிகழ்ச்சியில் பிரதம விருந்தினராக சபாநாயகர் கே. பி. ரட்னாயக்கா பங்குபற்றினார்.

வண. மடிகே பஞ்ஞாசீக தேரர், வண. மடித்திய விஜித்தநாயக்க தேரர், பிரதி அமைச்சர் ஏ. வி. சுரவீர, ஐ. தே. கவின் முன்னாள் அமைச்சர் டிரோன் பெர்னாண்டோ, இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நரேஷ்வர் தயாள், தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் எம். சிவசிதம்பரம் மற்றும் பல எம். பிக்கள் பிரமுகர்கள் இந்த நிகழ்ச்சியில் பங்குபற்றினர். (உ)

தமிழ், சிங்களமொழி

# போதனையாளர்கள் 200 பேருக்கும் தொண்டர் ஆசிரியர் நியமனம்

வடக்கு - கிழக்கு மாகாண சபையால் நியமனம் வழங்கப்பட்டு, பின்னர் வேலை நீக்கம் செய்யப்பட்ட தமிழ் மற்றும் சிங்கள மொழி போதிக்கும் ஆசிரியர்கள் இருநூறு பேரையும் தொண்டர் ஆசிரியர்களாக நியமிக்க கல்வி, உயர்கல்வி அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கு – கிழக்கில் உள்ள தமிழ்ப்பாடசாலைகளில் சிங்கள மொழியைப்போதிக்க சிங்கள ஆசிரியர்களாகவும், சிங்களப்பாடசாலைகளில் தமிழ் போதிக்க தமிழ் ஆசிரியர்களாகவும் சுமார் 200 பேர் வடக்கு - கிழக்கு மாகாண சபையால் நியமிக்கப்பட்டிருந்தனர்.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநராக லயனல் பெர்னாண்டோ இருந்த சமயத்தில் இந்த நியமனம் வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இந் நியமனங்களுக்கு அப்போது கல்வி, உயர்கல்வி அமைச்சு உத்தியோகபூர்வ அனுமதியை வழங்கியிருக்கவில்லை.

இவர்களுக்கான சம்பளத்தை தொடர்ந்து வழங்க முடியாத நிலையில் கடந்த மாதம் மாகாண கல்வி அமைச்சு இவர்களைப் பதவி நீக்கம் செய்திருந்தது.

இவர்களைத் தொண்டர் ஆசிரியர்களாகப் பணியாற்ற அனுமதிக்கும் படியும் —

இவர்கள் 4 வருட காலத்துக்குள் ஜி. சீ. ஈ, (உயர் தர) பரீட்சையில் சித்தியடைய வேண்டும் என்றும் —

அதன்பின் இவர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கலாம் என்றும் —

கல்வி, உயர்கல்வி அமைச்சு மாகாணசபைக்கு பணிப்புரை வழங்கியுள்ளது. (உ-3-150)

# பளைக் கோட்டத்துக்கு ஆபத்து அலவன்ஸ் இல்லை

## மே மாத சம்பளமும் இன்னும் இல்லை

தென்மராட்சி, ஜன. 13

பளை கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு இதுவரை ஆபத்து அலவன்ஸ் வழங்கப்படவில்லை.

யாழ். மாவட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு மூன்றுமாதங்களுக்குரிய ஆபத்து அலவன்ஸ் கடந்த மாதம் வழங்கப்பட்டுவிட்டபோதிலும் பளைப் பகுதி ஆசிரியர்களுக்கு இதுவரை வழங்கப்படாதது குறித்து அப்பகுதி ஆசிரியர்கள் கவலை தெரிவித்தனர்.

பளை கல்விக் கோட்டம் தற்போது யாழ். கல்வித் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேசமயம் —

பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு கடந்த ஆண்டு மே மாதத்திற்குரிய சம்பளமும் இன்னமும் வழங்கப்படவில்லை.

கிளாலி போக்குவரத்து தடைப்பட்டதால் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தினால் மே மாதத்திற்குரிய சம்பளம் வழங்கப்படவில்லை எனவும்—

பளைக் கல்விக் கோட்டம் தற்போது யாழ். கல்வித் திணைக்களத்துடன் இணைக்கப்பட்டதை அடுத்து ஜூன் மாதம் தொடக்கம் சம்பளம் வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மே மாதத்திற்குரிய வேதனம் இதுவரை வழங்கப்படவில்லை. (உ-117)

# பௌத்த சிங்களவரின் உரிமைகள் பேணுவதற்கு 20 பிரதிநிதிகள் குழு

## மகாசங்கத்தால் நியமனம்

கொழும்பு, ஜன. 13

பௌத்த சிங்கள மக்களின் உரிமைகள் பறிக்கப்பட்டு வருவது குறித்து ஆராய்ந்து, நடவடிக்கை மேற்கொள்ள 20 பேர் கொண்ட குழு ஒன்று மகாசங்கத்தால் அமைக்கப்பட்டுள்ளது.

மல்வத்தை, அமரபுர, ராமநாயக்க மகாசங்கங்களின் பிரதிநிதிகள் உட்பட பல்வேறு பௌத்த அமைப்புக்களின் பிரதிநிதிகள் இக் குழுவில் அங்கம் பெறுகின்றனர்..

பௌத்த சிங்கள மக்களின் உரிமைகள் சிறுபான்மையினத்தவர்களால் பறிக்கப்பட்டு வருவது —

சிங்கள பௌத்த மக்களுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடி நிலை —

அவர்களின் உரிமைகளை நிலைநாட்ட எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள்—

ஆகியன குறித்து இந்தக் குழு ஆராய்ந்து கொள்கைத் திட்டம் ஒன்றைத் தயாரிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

# திருகோணமலை நகரத்தில் விசேட அடையாள அட்டை

## ஒரு லட்சத்து60 ஆயிரம் பேருக்கு!

திருகோணமலை, ஜன. 13

திருகோணமலை நகரப் பகுதியில் உள்ள ஒருலட்சத்து 60 ஆயிரம் பேருக்கு விசேட அடையாள அட்டை வழங்கப்படவிருக்கிறது.

திருகோணமலை நகர சபையில் வைத்து தினமும் அடையாள அட்டை வழங்கும் பணியை இராணுவத்தினர் மேற்கொண்டுள்ளனர்.

14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு வழங்கப்படும் இந்த அடையாள அட்டை கந்தளாய், மூதூர், கிண்ணியா, வெருகல், குச்சவெளி, கோமரங்கடவல, மொறவெவ, பதவிசிறிவிர ஆகிய பகுதி மக்களுக்கும் வழங்கப்படவிருக்கிறது.

இதுவரை 24 ஆயிரம் பேருக்கு இந்த விசேட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. (உ-3-150)

# மோட்டார் போக்குவரத்து திணைக்களப் பணி ஆரம்பம்

யாழ். செயலக மோட்டார் போக்குவரத்துத் திணைக்கள வேலைகள் மீண்டும் எதிர்வரும் புதன்கிழமை ஆரம்பிக்கும் என்று மோட்டார் போக்குவரத்து பிரதி ஆணையாளர் திரு. எஸ். பத்மநாதன் தெரிவித்தார்.

வாகன வரிக்கான பற்றுச்சீட்டுக்கள் முடிவடைந்ததால் கடந்த ஒரு வாரமாக இந்த அலுவலகப் பணிகள் இடைநிறுத்தப்பட்டிருந்ததாகவும் —

எதிர்வரும் புதன்கிழமையில் இருந்து இந்த அலுவலகப் பணிகள் வழமைபோல் நடைபெறும் என்றும் —அவர் தெரிவித்தார்.

கடந்த ஆண்டுக்குரிய வரியைச் செலுத்திய பலரின் பற்றுச்சீட்டுக்கள் அங்கு தேங்கிக் கிடப்பதாகவும் —

சம்பந்தப்பட்டவர்களை அவற்றை உடன் பெற்றுச் செல்லுமாறும் — அவர் கேட்டுள்ளார்.

அதே நேரம் — இவ்வாண்டுக்கான வரியை எதிர்வரும் புதன்கிழமை முதல் செலுத்தலாம் என்றும் அவர் தெரிவித்தார். (உ-3)

## கலை நிகழ்வு

வடமராட்சி, ஜன. 13

தென்புலோலி சிங்கைநகர் உதய சூரியன் முன்னேற்ற மன்ற சனசமூகநிலைய அறவழி மழலைகள் கல்விப் பூங்காவின் கலைநிகழ்வுகளும், தைத்திருநாள் விழாவும் தைப்பொங்கல் தினமான நாளை நடைபெறும்.

வடமராட்சி வடக்கு, பருத்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமிபிரதமவிருந்தினராகவும், பருத்தித்துறை பிரதேசசபைச் செயலாளர் திரு. ச. செவ்வந்திநாதர் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்வர். (உ-173)

# பண்டத்தரிப்புச் சந்தையை இயங்க வைக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஜன. 13

1992 ஒகஸ்ட் தொடக்கம் இயங்காதிருக்கும் பண்டத்தரிப்புச்சந்தையை மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று அப்பகுதி மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

பண்டத்தரிப்பு, வடலியடைப்பு, சில்லாலை, மாதகல், பிரான்பற்று, பெரியவிளான், இளவாலை ஆகிய பல கிராமங்களிலிருந்து உற்பத்தியாகும் விவசாயப் பொருள்களும் மரக்கறி வகைகளும் இந்த சந்தைக்கே கொண்டுவரப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வந்தது.

தற்போது இப்பகுதிகளில் பொது மக்கள் அதிகளவில் மீளக் குடியேறி வசித்து வருவதால் தங்களுக்குத் தேவையான மரக்கறி, மீன் உட்பட மற்றும் அத்தியாவசியப் பொருள்களை பெற்றுக் கொள்ள வசதியாக இந்தச் சந்தையை கூடிய விரைவில் மீண்டும் இயங்கச் செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் ஒழுங்குகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதே வேளை இச் சந்தையின் கூரை சீற்றுகள் மரங்கள் யாவும் கழற்றப்பட்ட நிலையில் தூண்கள் மட்டுமே தற்போது காணப்படுகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (உ-135)

# சில்லறை ஏற்க மறுப்பு

யாழ்ப்பாணம், ஜன. 13

பணம் வைப்பிலிடுபவர்களிடமிருந்து சில்லறை நாணயங்களைப் பெற்றுக்கொள்வதற்கு யாழ். வங்கிக் கிளைகள் பின்னடிப்பதாக யாழ்ப்பாண வர்த்தகர்களிடமிருந்து முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

வர்த்தகர்களிடமிருந்து சில்லறை நாணயங்களைப்பெற வங்கிகள் பின்னடிப்பதால் வர்த்தகர்கள் பொதுமக்களிடம் சில்லறைவியாபாரத்தை மேற்கொள்ள பின் நிற்கிறார்கள்.

சாதாரண கொள்வனவிற்கும் மக்கள் நோட்டுக்களைக் கொடுத்தே கொள்வனவு செய்ய வேண்டிய நிலை உருவாகிவருகிறது. (உ-15)

# உத்தேச கருத்துக் கணிப்புக்கு தெற்கில் எதிர்ப்பு வலுக்கின்றது

கொழும்பு, ஜன. 13

இனப்பிரச்சினை தீர்வுக்காக அரசாங்கம் மேற்கொள்ள திட்டமிட்டுள்ள கருத்துக் கணிப்புக்கு தெற்கில் எதிர்ப்பு வலுவடைந்து வருவதாக கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன.

கருத்துக்கணிப்புத் தொடர்பான அரசின் பிரசாரம் உச்சகட்டத்தை அடையும் நேரத்தில், அதற்கு எதிரான பிரசாரமும் முடுக்கி விடப்பட்டுள்ளது.

சிங்களவர் பாதுகாப்பு அமைப்பு, சிங்கள மக்களின் உரிமைகளுக்கான இயக்கம் என்று பல பெயர்களில் உருவாகியுள்ள சிங்கள அமைப்புக்கள் இந்தப் பிரசாரத்தில் இறங்கியுள்ளன.

சிங்களமக்களின் உரிமைகள் அரசின் கருந்துக்கணிப்பின் மூலம் குழி தோண்டிப்புதைக்கப்படக்கூடும் என அந்த அமைப்புக்கள் பகிரங்கமாக எச்சரித்து வருகின்றன.

— இப்படி கொழும்பு பத்திரிகை செய்திகள் தெரிவித்தன. (உ-3-150)

## சிமெந்து விநியோகம்

வலி. தென்மேற்கு, ஜன. 13

பண்டத்தரிப்பு, சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களில் சீமெந்து பக்கெட் ஒன்று 540 ரூ [illegible] அடிப்படையில் விநியோகம் செய்யப்படுகின்றது. (உ-145)

# தென்மராட்சியில் அ. அட்டை விநியோகம்

தென்மராட்சி பிரதேசத்தில் உள்ள கிராம அலுவலர் பிரிவுகளில் தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பித்த 258 பேரின் தேசிய அடையாள அட்டைகள் பிரதேச செயலகத்திற்கு வந்துள்ளன.

இந்த அடையாள அட்டைகள் அந்தந்த கிராம அலுவலர்கள் மூலம் வழங்கப்படவுள்ளது.

தென்மராட்சி பிரதேசத்தில் தங்கியிருந்த போது அடையாள அட்டைக்கு விண்ணப்பம் செய்த வலிகாமம் பகுதியைச் சேர்ந்தவர்கள் தமது தேசிய அடையாள அட்டைகளை தாம் விண்ணப்பித்த தென்மராட்சிப் பிரிவு கிராம அலுவலர்களிடம் பெற்றுக் கொள்ளுமாறு பிரதேச செயலர் பு. சுந்தரம்பிள்ளை தெரிவித்துள்ளார்.

இதே வேளை இப்பகுதி பாடசாலைகள் மூலம் விண்ணப்பித்த மாணவர்களின் தேசிய அடையாள அட்டைகளும் அந்தந்தப் பாடசாலைகளுக்கு வந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டது. (உ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சித் தேர்தலுக்கான ஆயத்தங்களைத் துரிதப்படுத்துக!

## சுதந்திரக்கட்சி எம். பிக்களுக்கு ஜனாதிபதி பணிப்பு

கொழும்பு, ஜன. 13

விரைவில் நடைபெறவிருக்கும் உள்ளூராட்சித் தேர்தல்களுக்கான ஆயத்த நடவடிக்கைகளை இப்போதே மும்முரமாக மேற்கொள்ளுங்கள்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் எம். பிக்களுக்கு இவ்வாறு பணிப்புரை விடுத்திருக்கின்றார்.

கடந்த வியாழனன்று மாலை நாடாளுமன்றக் கட்டடத்தில் சுதந்திரக்கட்சி எம். பிக்களைச் சந்தித்து கலந்துரையாடிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியின் பொதுப்பட்டியலில் போட்டியிடுமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் —

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி (லலித் பிரிவு) இந்தத் தேர்தலில் சில இடங்களில் தனித்துப் போட்டியிடவும், சில இடங்களில் பொது மக்கள் ஐக்கிய முன்னணியுடன் இணைந்து பொதுப் பட்டியலில் போட்டியிடவும் விரும்புவதாகவும் —

இந்தக்கூட்டத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டது.

(உ-150)

## ஆளுநர் கொழும்பில்:

## மாகாண சபையின் பணிகள் பாதிப்பு!

திருகோணமலை, ஜன. 13

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் காமினி பொன்சேகா கொழும்பிலிருந்து பணியாற்றுவதாய் மாகாண சபையின் நடவடிக்கைகள், பணிகள் தாமதமாவதாகப் பொது மக்கள் முறைப்பாடு தெரிவிக்கின்றனர்.

கொழும்பில் அமைந்துள்ள இணைப்பு அலுவலகத்துக்கு தினமும் வரும் ஆளுநர் திருகோணமலையிலுள்ள அவரது அலுவலகத்துக்கு 3 மாதத்துக்கு ஒரு தடவையே சமுகம் தருகின்றார்.

திருகோணமலையில் உள்ள ஆளுநர் அலுவலகத்தில் நிர்வாக அதிகாரி, இரண்டு எழுதுவினைஞர்கள், இரண்டு தட்டெழுத்தாளர்கள், ஒரு தொலைபேசி இயக்குநர் ஆகியோர் பணியாற்றுகிறார்கள. ஆளுநருக்கு வரும் கடிதங்களை கொழும்பு அலுவலகத்துக்கு அனுப்பும் பணி ஒன்றை மட்டுமே அவர்கள் செய்கிறார்கள்.

மாகாண சபையின் அவசர வேலைகளுக்கும் அங்கீகாரம் பெறுவதற்கும் மாகாண அதிகாரிகள் அடிக்கடி கொழும்பு செல்ல வேண்டியுள்ளதால், வீணான செலவும் வழமையான நடவடிக்கைகளில் பாதிப்பும் ஏற்படுவதாகக் கூறப்படுகின்றது.

ஆளுநரைச் சந்திக்க மாகாணசபை அதிகாரிகள் கொழும்பு சென்று விடுவதால், மக்கள் தமது பணிகளை மேற்கொள்ள அந்த அதிகாரிகளுக்குத் தவம் கிடக்க வேண்டியும் உள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதற்கு முன்பு ஆளுநர்களாகப் பணியாற்றியவர்கள் திருகோணமலையிலேயே தங்கி சேவை புரிந்து வந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-150-3)

## இந்து சமய திணைக்களத்தின் பணிமனை திருமலையில்

திருகோணமலை செயலகத்தில் முதற் தடவையாக இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் பணிமனை திறக்கப்பட்டுள்ளது.

இத் திணைக்கள உத்தியோகத்தராக திரு. எஸ். மகேந்திரராசா நியமிக்கப்பட்டுள்ளார்.

திருகோணமலை அரச அதிபரின் மேற்பார்வையில் இயங்கும் இந்த அலுவலகம் அறநெறிப் பாடசாலைகள், இந்து அமைப்புக்கள், இந்து ஆலயங்கள் ஆகியவற்றை பதியும் பணியை ஆரம்பித்துள்ளது.

இந்து நிறுவனங்களுக்கான உதவிகளை வழங்கல், இந்து ஆலய புனரமைப்பு போன்ற பணிகளை இந்த அலுவலகம் மேற்கொள்ளும்.

(உ-150-3)

## மக்கள் அசௌகரியம்

யாழ்ப்பாணம், ஜன. 13

கொக்குவில், கோண்டாவில், தாவடி, இணுவில் பகுதிகளில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுற்றிவளைப்புத் தேடுதல் நடவடிக்கைகளினால் அப்பகுதி மக்களும், அப்பகுதியூடாகப் போய் வந்த மக்களும் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கினர்.

வீதிகளில் சென்றோரும் பொது இடங்களில் சுமார் மூன்று மணி நேரம் ஆங்காங்கே தடுத்து வைக்கப்பட்டு தலையாட்டி முன்னர் நிறுத்தப்பட்ட பின்னர் விடுவிக்கப்பட்டனர். வீடுகளில் இருந்தோரும் ஆங்காங்கே பொது நிலையங்களுக்குக் கூட்டிச் செல்லப்பட்டு தலையாட்டி முன்பாக நிறுத்தப்பட்டதாகத் தெரியவந்தது.

இதற்கிடையில் —

நேற்றுக்காலை 10 மணி முதல் மாலை வரை தட்டா தெருச்சந்தி ஊடாக எவரும் யாழ்ப்பாணம் வர அனுமதிக்கப்படவில்லை. இதன் காரணமாக நேற்று முனதினம் காலை 10 மணி முதல் மாலை 5 மணிவரை பல நூற்றுக்கணக்கான மக்கள் யாழ். செல்வதற்காக தட்டாதெருவுக்கும் நாச்சிமார் கோயிலடிக்கும் இடையில் தண்ணீர், உணவின்றி பசி, தாகத்துடன் காத்துக் கிடந்தனர்.

தட்டாதெருப் பாதை திடீரென மூடப்படுவது குறித்து முன்னறிவித்தல் கொடுக்க முடியாவிட்டாலும் கூட —

பாதை மூடப்பட்ட பின்னர் அது பற்றிய அறிவிப்பை, யாழ்ப்பாணத்திலிருந்து கலட்டி ஊடாக வலிகாமத்தின் ஏனைய பகுதிகளுக்குச் செல்லும் மக்களுக்கு கலட்டிப் பாதையில் வைத்துத் தெரிவித்திருந்தாலாவது, அத்தியாவசியமற்ற தேவைகளுக்காக — விடுமுறைநாளான நேற்று முன்தினம் சனிக்கிழமையன்று — செல்பவர்கள் அதனைத் தவித்திருப்பர்; யாழ்ப்பாணத்துக்குத் திரும்பி வருவதற்காக வீணாக நீண்ட நேரம் காத்துக்கிடக்கும் அவலமும் அவர்களுக்கு ஏற்பட்டிருக்காது — என்று பாதை திறப்பதற்காகக் காத்துக் கிடந்த சிலர் முணுமுணுத்ததைக் கேட்க முடிந்தது.

(உ-135)

## மீண்டும் வெற்றிலை செய்கை

வெற்றிலைக்குப் பேர் போன சில்லாலைக் கிராமத்தில் மீண்டும் வெற்றிலைச் செய்கை ஆரம்பமாகியுள்ளது.

மக்கள் இடப்பெயர்வால் அழிந்து போனவெற்றிலைத் தோட்டங்களில் தற்போது புதிதாக மீள்நடுகையில் மக்கள் துரிதமாக ஈடுபட்டு வருவதைக் காணமுடிகின்றது.

(உ-135)

## புதிய கணனி நுண் பொருள் தயாரிப்பு

'யாழன் தமிழ்த் தொகுப்பு' என்ற பெயரில் புதிய கணனி நுண்பொருள் (software) ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.

ஆங்கிலம் தெரிந்த சிறுவர்களும் கணனி மூலம் எளிதில் தமிழ் கற்றுக் கொள்ள இந்த புதிய நுண்பொருள் உதவும் என்று கூறப்படுகின்றது.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும், தற்போது அமெரிக்காவில் வசிப்பவருமான ராமலிங்கம் சண்முகலிங்கம் என்பவரும், ஜேர்மனியை சேர்ந்த சிறிஸ் அரிஸ் என்பவரும் சேர்ந்து இதனை உருவாக்கியுள்ளனர்.

மூன்று ஆண்டுகளாக 600 மணி நேரம் உழைத்து இந்த நுண்பொருளை தாங்கள் உருவாக்கியுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர்.

(உ-3)

## ஏ. ஆர். வி. விநியோகம்

யாழ். சுகாதார திணைக்களத்தின் மாவட்ட மருந்துக் களஞ்சியப் பிரிவுக்கு ஏ.ஆர். வி. எனப்படும் விசர் நாய் கடி தடுப்பு ஊசி மருந்து கொழும்பிலிருந்து வந்து சேர்ந்துள்ளது.

யாழ். போதனாவைத்திய சாலைக்கும் பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பழை ஆகிய அரசினர் வைத்திய சாலைக்கும் இந்த தடுப்பு ஊசிமருந்து மாவட்டமருந்து களஞ்சிய பிரிவினரால் விநியோகம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

(135)

## வைத்தியர் பற்றாக்குறை

யாழ். சுகாதார திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட வைத்திய அதிகாரிகளுக்கு (ஆர். எம். பி) பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. யாழ். மாவட்டத்திலுள்ள அரசினர் மத்திய மருந்தகங்கள் பலவற்றில் இவர்களுக்கான வெற்றிடங்கள் பல நிரப்பப்படாது. இருப்பதாகவும் ஒரு மருந்தகத்தின் வைத்தியரே அயலில் உள்ள மருந்தகத்திலும் சென்று பதில் கடமை செய்ய வேண்டிய நிலைமை நிலவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை மருந்துக் கலவையாளர்கள், மருத்துவ மாதர்கள், பொது சுகாதார பரிசோதகர்கள் ஆகியோருக்கும் யாழ். சுகாதார திணைக்களத்தில் பற்றாக்குறை நிலவி வருவது குறிப்பிடத்தக்கது.

(135)

## பளைப் பகுதி புறக்கணிப்பு ஏன்?

அண்மைக் காலத்தில் நடைபெற்ற அரசாங்கச் சேவைகளுக்கான போட்டிப் பரீட்சைகளில் பச்சிலைப்பள்ளிப் பிரதேசம் புறக்கணிக்கப்படுவதை உரியவர்கள் கவனத்தில் எடுப்பார்களா?

ஆசிரியர் தெரிவுப் போட்டிப் பரீட்சை கிளிநொச்சியில் மட்டும் இடம்பெற்றபோது, பச்சிலைப்பள்ளி விண்ணப்பதாரிகள் கிளாலியால் போக முடியாமல் தவறவிட்டார்கள். அதை அடுத்து எமது மக்கள் சனசமூக நிலையம் இதனை பிரதேச செயலாளரினதும் ஏனைய அதிகாரிகளினதும் கவனத்திற்குக் கொண்டு வந்து இவ்வாறான போட்டிப் பரீட்சைகளை பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் நடத்த வேண்டுமெனக் கோரியது. பிரதேச சபை செயலரும் ஆவன செய்யப்படுமென உறுதி அளித்திருந்தார்.

28 - 12 - 1996 இல் நடைபெற்ற கிராம உத்தியோகத்தருக்கான தெரிவுப் போட்டிப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பச்சிலைப்பள்ளி விண்ணப்பதாரிகள் எவருக்குமே பரீட்சை நுழைவுக்கான அனுமதி அட்டைகள் கிடைக்கவில்லை. ஆனால் குறித்த திகதியில் போட்டிப் பரீட்சை நடைபெற்றுள்ளது.

ஐம்பது ரூபா கட்டணம் செலுத்தி விண்ணப்பித்திருந்த போதிலும் பரீட்சைக்குத் தோற்ற முடியாமல் போனதை யாரிடம் முறையிடுவதென விண்ணப்பதாரிகள் அங்கலாக்கின்றார்கள். அரசின் நிர்வாகத்தின் கீழுள்ள பகுதிகளிலேயே இந்நிலையா என்று புதிராக உள்ளது. பரீட்சையை எதிர்பார்த்து படித்திருந்த மாணவர்களின் நிலை என்னாவது? இந்நிலை மேலும் தொடராமல் இருக்க உரியவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா?

**சி. கதிர்காமன்**

மக்கள் சனசமூக நிலையம்,
இந்திராபுரம்.

## வினாத்தாள்கள் எப்படி அமையும்?

யாழ்ப்பாண மாணவர்களாகிய நாங்கள் ஒரு சிலவருடங்களாக கல்வி ரீதியாக, நேரடியான, மறைமுகமான தாக்கங்களுக்கு உட்பட்டு வருகின்றோம். அந்த வகையில் 1997ஆம் ஆண்டு ஜீ. சீ. ஈ. உயர்தரப்பரீட்சை எடுக்கும் எங்களுக்கு ஒரு மிகப்பெரிய தாக்கம் ஏற்படப் போகின்றது. இது தொடர்பாக வை. தயாளன் என்ற வாசகர் 18 - 12 - 1996 ஆம் திகதி உதயனில் "1997 புதிய பாடத்திட்டம் எது?" என்று கடிதம் எழுதியிருந்தார். அது சார்பாகவே நானும் இக்கடிதத்தை வரைகின்றேன்.

அதாவது 1994ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதற் தடவையாக ஜீ. சீ. ஈ. (சாதாரணதரப்) பரீட்சை எடுத்தவர்களுக்கு 1995 ஆம் ஆண்டு கல்வி உயர்கல்வி அமைச்சினால் புதியதொரு பாடத்திட்டம் அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது. அப்புதிய பாடத்திட்டம் 1995ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் அச்சிடப்பட்டு, யாழ்ப்பாணம் தவிர்ந்த ஏனைய மாவட்டப் பாடசாலைகளுக்கு அந்த மாதத்திலேயே அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

**வாசகர் திருமுகம்**

ஆனால் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கு 1996 டிசம்பர் மாதம் ஆகியும் பாடத்திட்டம் பூரணமாக அனுப்பிவைக்கப்படவில்லை. ஒரு சில பாடங்களுக்கு மட்டும் நவம்பரில் பாடத்திட்டம் அனுப்பி வைக்கப்பட்டது. அதுகூட இன்னும் சில பாடசாலைகளுக்கு கிடைக்காத நிலையும் உண்டு. இப்பரீட்சைக்கு இன்னும் 7 மாதங்களே உள்ளன.

ஆனால் யாழ்ப்பாணப் பாடசாலைகளில், பாடத்திட்டம் கிடைக்காமையினால், பழைய பாடத்திட்டத்திற்கு அமைவாகவே கற்பித்தல்கள் இடம் பெற்றன. நவம்பர் மாதம் கிடைத்த புதிய பாடத்திட்டத்தை பழையதுடன் ஒப்பிட்டு நோக்கில் 60 சத வீதத்திற்கு மேலாக மாற்றம் அடைந்துள்ளது. அத்துடன் ஆரம்பத்தில் படித்தவற்றில் ஐம்பது சத வீதமானவை நீக்கப்பட்டுள்ளன. யாழ். மாணவர்கள் என்ன செய்வது?

இது இவ்வாறு ஒரு புறம் இருக்க, கடந்த நவம்பரில் தொண்டைமானாறு வெளிக்களநிலையத்தால் நடத்தப்பட்ட பரீட்சை வினாத்தாள்கள் 1996ஆம் ஆண்டு பாடத்திட்டத்துடன் ஒப்பிடும்போது பெரும் மாற்றத்திற்கு உள்ளாகி இருந்தது. ஆயினும் இந்த வினாத்தாள்கள் புதிய பாடத்திட்டத்திற்கு அமைவாக தயாரிக்கப் படவில்லை என்று தெரியவருகிறது. அவ்வாறாயின் சரியான வினாத்தாள் அமைப்பு எது?

இது தொடர்பாக நடவடிக்கை எடுத்து மாணவர்களாகிய எங்களுக்கு யார் உதவப் போகிறார்கள்? அல்லது எவரும் இதில் அக்கறை கொள்ளாவிடில் 1997 ஒகஸ்டில் உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் தான் வினாத் தாள்களின் அமைப்பினைப் பார்க்க நேரிடும்?

**புத்தூர்.** **தி. விமலன்**

## இறுதிப் பரீட்சை முடிவு எப்போது?

பல்கலைக் கழக இறுதிப் பரீட்சை சென்ற வருடம் பெப்ரவரி மாதம் நடைபெற்றது. ஆனால் ஏறக்குறைய ஒரு வருடம் முடிவடையும் நிலையிலும் பரீட்சைப் பெறுபேறுகள் பல்கலைக்கழக நிர்வாகத்தினரால் இன்னும் வெளியிடப்படவில்லை.

பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் 'திரிசங்கு' நிலையில் உள்ளார்கள். தொழில்கள் பெறும் வாய்ப்புகளை இழந்து கஷ்டப்படுகின்றனர். பரீட்சைப் பெறுபேறுகளை வெளியிடுவதில் நிர்வாகத்தினர் கொண்டுள்ள அசமந்த போக்கே இதற்குக் காரணம்.

இளைஞர்களின் வாழ்க்கை முன்னேற்றத்தை குலைக்கும் வகையில் மேலும் காலங்கடத்தாமல் உடயாகப் பெறுபேறுகளை வெளியிடுமாறு பல்கலைக்கழகத்தை கேட்டுக் கொள்கிறேன்.

**சி. சந்திரலேகா**

மட்டுவில் தெற்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள EN-7914 இலக்க A - 30 காரும், EN - 9606 இலக்க A - 50 கேம்பிறிட்ச் காரும் உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு :- யோகராஜா, ரயர்கடை, மந்திகை, பருத்தித்துறை. (44648)

லிஸ்டர் எஞ்ஜின் - RPM - 2000 - H. P. - 36, வெல்டிங் றான்ஸ்போமர், ஐசிங் சுகர் தயாரிப்பு மெசின், 10 அங். கிறைண்டர், தகரப் பெட்டியுடன் No.7 ஹல்லர், 10 அடி 2 அங். சாப்ற் விற்பனைக்கு உண்டு. கை. திருபுவனேஸ்வரன், பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு சந்தி, யாழ்ப்பாணம். (44645)

### தவறிவிட்டது

07 - 01 - 97 செவ்வாய்க்கிழமை நாவற்குழிக்கும், நுணாவில் சந்திக்கும் இடையில் பஸ்ஸில் 'சீக்கோ' பெண்கள் கைக்கடிகாரம் ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் செல்வம் கூல்பார், நவீன சந்தை, சாவகச்சேரி என்ற முகவரியில் ஒப்படைக்கவும். (44655)

ஆஸ்பத்திரி வீதி, வைரவர் கோயில் முன்னால் 11-1-97 சனிக்கிழமை கைச்சங்கிலி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து வாகினி, 82/12, செட்டித் தெரு, நல்லூர் முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். சன்மானம் வழங்கப்படும். S. வாகினி (9169)

நெல்லியடிக்கும் பருத்தித்துறைக்குமிடையில் மூக்குக் கண்ணாடி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர் தயவு செய்து பருத்தித்துறை 1 ஆம் கட்டை, ராணி பேக்கரியில் ஒப்படைக்கும்படி கேட்டுக் கொள்கின்றேன். க. குணலிங்கம். (44643)

### காணி விற்பனைக்கு

இல. 19, அம்பலவாணர் வீதியிலுள்ள 1½ பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு; 60, புதுவீதி, அத்தியடி, யாழ்ப்பாணம். (44647)

### பழைய புத்தகங்கள்

பழைய பாடசாலைப் புத்தகங்கள், தமிழ் / ஆங்கில நாவல்கள் மற்றும் சகல விதமான புத்தகங்கள் வாங்கவும், விற்கவும் புதிய வெளியீடுகளான ஆண்டாள் திருப்பாவை, குயில் பாட்டு, கானல் வரி, கும்பகர்ணன் வதைப்படலம் பெற்றுக்கொள்ளவும் பாலன் புத்தக நிலையம், 87, சிவன் வடக்கு வீதி, யாழ்ப்பாணம். (வைத்தீஸ்வராக் கல்லூரி அருகில்) (44597)

### MATHS

ஆண்டு 6 இலிருந்து (O/L) வரை கணித பாடத்தில் ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கும், இதுவரையும் சித்தியடையாதவர்களுக்கும், 31 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன், 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, சுண்டுக்குளி. (9165)

## மன்னார் பயணிகள் கலந்துரையாடல்

மன்னாருக்கு கப்பல் மூலம் பயணிகள் செல்வது பற்றிய கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9.30 மணிக்கு யாழ். பஸ் டிப்போவில் நடைபெற விருப்பதாக மன்னார் டிப்போ முகாமையாளர் ...ஸ். இராஜரத்தினம் ...தார். (உ-3)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



தோற்றம்: 18 — 02 — 1917

மறைவு: 17 — 12 — 1996

### சி. வ. வைத்தியலிங்கம்

(யா/ டிறிபேர்க் கல்லூரி முன்னாள் கனிஷ்ட அதிபர், யாழ். மாவட்ட சமாதான நீதிவான், முன்னாள் தலைவர் சாவகச்சேரி ப. நோ. கூ. சங்கம்)

எமது குடும்பப் பெரியார் சி. வ. வைத்தியலிங்கம் அவர்களின் இறுதி ஆராதனையில் கலந்தும், கடித மூலமாகவும் அனுதாபங்களைத் தெரிவித்தோருக்கும், பத்திரிகைகள் மூலமாகவும், பிரசுரங்கள் மூலமாகவும் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும், சகல வழிகளிலும் உதவிகள் புரிந்தோருக்கும் எமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவிப்பதோடு,

எதிர்வரும் 16 - 01 - 97 வியாழக்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆராதனையிலும், மதிய போசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

''கிருபாபதி''
நுணாவில் கிழக்கு,
சாவகச்சேரி.

(சி-3911)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



### அமரர் வி. எஸ். குணசிங்கம்

(ஓய்வு பெற்ற லிகிதர், முன்னாள் கூ.ஊ.தொ.ச. நிர்வாகச் செயலாளர்)

தோற்றம்: **1951-02-05**

மறைவு: **1996-12-16**

விடிந்தும் விடியாப் பொழுதில்
விரைந்துவிட்டீர்களே அப்பா!
ஆறு இருந்தும் இரண்டாய் நாங்கள்
திக்கிற்கு ஒன்றாய் தேம்பும் ஒலிகள்
ஆறுதில்லையே.. எங்களின் மனம்
இளைப்பாறிட வேண்டும் – உங்களின்
ஆத்மா ஆண்டவன் நிழலில் ......
ஓம் சாந்தி!

அன்னாரின் இறுதி நிகழ்வில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர்வளையம் வைத்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும் எமது நன்றிகள்

இன்று (13-01-97) நடைபெறவிருக்கும் அன்னாரது அந்தியேட்டி நிகழ்வில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

இல. 03 பலாலி வீதி,
யாழ்ப்பாணம்.

(44641)

## பதிவகப் பணிகளும் பிரதேச செயலகங்களில்

யாழ்ப்பாணம், ஜன. 13

யாழ். மாவட்ட பதிவகப் பணிகள் இவ்வருடத்தில் பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்படவிருக்கின்றன.

யாழ். செயலகத்தில் தற்சமயம் இயங்கிவரும் மாவட்ட பதிவக பிரிவின் பணிகள் பிரதேச செயலகங்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட பின்னர் பொதுமக்கள் தமக்கு தேவையான பிறப்பு, இறப்பு, விவாகச் சான்றிதழ்களை நேரடியாக பிரதேச செயலகங்களில் பெறலாம்.

தெல்லிப்பளை உதவி அரச அதிபர் பிரிவு தவிர்ந்த ஏனைய பிரதேச செயலகங்களுக்கு இந்தப்பணி இந்த வருடத்தில் பன்முகப்படுத்தப்படும் என்றும் —

பன்முகப்படுத்தும் நடவடிக்கை தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்றும் —

மேலதிக மாவட்டப் பதிவாளரும், காணிப்பதிவாளருமாகிய திரு. ந. சதாசிவ ஐயர் தெரிவித்தார். (உ-3)

## யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 800 இளைஞருக்கு தொழில் பயிற்சி!

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 800 இளைஞர், யுவதிகளுக்கு தொழிற்பயிற்சி அளிக்க தொழில் பயிற்சி அதிகார சபைக்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

வடக்கில் ஆயிரத்து 800 பேருக்கு பயிற்சி அளிக்கும் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாணத்தில் 800 பேருக்கு பல்வேறு திணைக்களங்களில் பயிற்சி அளிக்கப்படும் என்று தொழிற்பயிற்சி அதிகார சபை அதிகாரியான திரு. ம. சிவயோகசுந்தரம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்படும் புனர்வாழ்வுப் பணிகளுக்கு தேவையான துறைகளில் இவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும்.

மேசன், தச்சுத் தொழில் உட்பட தட்டச்சு, எழுதுநர் துறைகளிலும் இப்பயிற்சி அளிக்கப்படும். (உ-3)


## மனோகரன் & வெற்றிவேல்

உங்களை அன்புடன் அழைக்கின்றது

கட்டட அமைப்பின் முன்னோடிகளான
மனோகரன் & வெற்றிவேல் நிறுவனம்
மலரப்போகின்ற தமிழர் திருநாளாகிய
தைப்பொங்கலுக்கு
தமது நல்வாழ்த்துகளை
அனைவருக்கும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கின்றது.

★ கட்டட அமைப்பு ★
★ கட்டட புனரமைப்பு ★
★ கட்டட வரைபடம் ★
★ கட்டட மதிப்பீடு ★

என்பவற்றிற்கு தன் சேவையை வழங்க காத்திருக்கின்றது. ஏழாலை தெற்கு காவாவோடை ஸ்ரீவசந்த நாகபூசணி அம்பாள் தேவஸ்தான கட்டட அமைப்பு வேலைகளை தைப்பொங்கல் தினத்தில் ஆரம்பிப்பது மூலம் தன் சேவைகளைத் தொடர்கின்றது.

அ. கி. மனோகரரூபன்,
ம. கருணாதேவி,
(நிர்வாகப் பங்காளர்கள்:
மனோகரன் & வெற்றிவேல்)

''இளவேனில்''
49A, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(44653)


## IN EVERLOVING MEMORY OF NAVARATNAM NAVARUBAN

**Called to rest on 13 - 01 - 1994 under tragic circumstances**

''Why must we bear this pain? We cannot tell.
We only know our LORD does
All Things Well; and so we Trust In God, our all in all''

**'May His Soul Rest In Peace'**

Fondly remembered by his-

**Beloved Wife Preminie, Sons Nishan and Dilan, Parents, Brother Balarajan, Sister Ranitha and-in-laws Mr. & Mrs. C. A. Balasingham, Host of Relations and Friends.**

(C/3829)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தமிழர் கல்வி

**வடக்கு - கிழக்கு** மாகாணத்தில் போரினால் சேதமடைந்த பாடசாலைகளைப் புனரமைப்புச் செய்வதற்கு 862 கோடி ரூபா தேவையென மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்தளவு பெருந்தொகைப் பணத்தைச் செலவிட்டு, சேதமுற்ற பாடசாலைகளைத் திருத்தி, மீண்டும் அவற்றைப் பழைய நிலைக்குக் கொண்டு வருவதற்குத் தேவையான நிதிவளம் அரசாங்கத்திடம் உண்டா என்பது ஒரு புறமிருக்க —

போரை முடிவுக்குக் கொண்டு வராமல் புனரமைப்புப் பணிகளைத் தொடங்குவதற்கு நிதி உதவி வழங்குவதற்கு வெளிநாடுகள் முன்வருமா என்ற ஐயப்பாடும் உண்டு.

பாடசாலைகளுக்கு உண்டான சேதங்களால் தமிழ் மாணவர்களின் கல்வி எந்தளவுக்குப் பாதிக்கப்பட்டுள்ளது என்பதனை மேற்படி மதிப்பீட்டிலிருந்து ஒருவாறு ஊகிக்கலாம்.

தென் பகுதி மாணவர்கள், தமது வகுப்பறைகளிலேயே கணனிப்பாட போதனை பெறுமளவுக்கு அங்கு கல்வி வசதிகள் பெருக்கப்பட்டுள்ளன. இருபத்தோராம் நூற்றாண்டுக்கு ஈடுகொடுக்கக் கூடிய வகையில்கல்விவளர்ச்சி முன்னெடுக்கப்படுகிறது.

ஆனால் வடக்கு - கிழக்கில் மாணவர்களுக்குரிய பாடநூல்கள் மற்றும் துணைப்பாட நூல்கள், சாதாரண ஆய்வு கூட வசதி இல்லாத அளவுக்கு, கல்விச் சூழல் பின்தங்கியுள்ளது.

மாணவர்கள் மட்டுமன்றி ஆசிரியர்கள் கூட கல்வித்துறை சார்ந்த புதிய தொழில் முறைகளை அறிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள். இரு தரப்பினரும் புதிய தேடல்களுக்கு வாய்ப்பு வசதி இன்றி, பழைய — இருண்ட — வெளித் தொடர்பு அறுந்த — நிலையிலேயே இருக்கின்றனர்.

தமிழர்கள் கல்வியைதமது வாழ்வியல் மூலதனமாகக் கருதி வாழ்ந்து, அதனால் பல வழிகளாலும் மேம்பட்டு நின்ற காலம் ஒன்று உண்டு. ஆனால் அந்த நிலையை மாற்றுவதற்கும் வேண்டுமானால் அழிப்பதற்கும் கடந்த சில தசாப்தங்களாக பலவகைச் சதிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவற்றின் பெறுபேறாக தமிழர்களின் கல்வி வளர்ச்சி அண்மைக்காலத்தில் பெரும் மந்த நிலை அடைந்திருக்கிறது.

இந்த நிலையிலிருந்து மீள்வதற்கு நீண்ட காலம் செல்லப் போகிறது. தமிழர் கல்வியில் உண்மையான அக்கறையுடன், திட்டமிட்ட முறையில், துரிதமாகச் செயற்பட்டால் மட்டுமே கல்வியே கருந்தனம் என்ற முந்திய நிலையை எய்தலாம்.

இது விடயத்தில் கரிசனையுடனும், நேர்மையுடனும், விசுவாசத்துடனும் கூடிய செயற்பாடு தமிழர் தரப்பில் இருந்தே வரவேண்டும். அதற்கான அதிகாரம் தமிழர் கைக்கு மாறும் வரை அவர்களின் பிள்ளைகளின் கல்வி வளர்ச்சி வெறும் அரசியல் வாக்குறுதிகளாகவோ அல்லது அரசியல் லாபம் கருதிய செயற்பாடுகளாகவோ அமையும் என்பதில் சந்தேகம் இல்லை.

# கிளிநொச்சியில் படை நடவடிக்கைக்கு ராணுவம் தயாரான போது பரந்தனை புலிகள் தாக்கினர்!

கொழும்பு, ஜன. 13

'கடந்த 9 ஆம் திகதி அதிகாலை கிளிநொச்சிக்கு தெற்கே 5 மைல் தூரத்தில் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள 54 ஆவது படை அணி சென்றிருந்தது. அத்துடன் முகாமில் இருந்த ஆட்டிலறிகள், மோட்டார்கள் ஆகியவற்றையும் அங்கு கொண்டு சென்று விட்டனர். இதனால் ஆள்பலமும், ஆயுதபலமும் குறைந்து பரந்தன் முகாம் பலவீன நிலையில் இருந்தது. அதனைப் புலிகள் பயன்படுத்தி விட்டனர்.

பரந்தன் முகாம் தாக்குதல் குறித்து 'த ஐலண்ட்' பததிரிகையின் ஞாயிறு பதிப்பில் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் மேற்கண்டவாறுதெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறியுள்ளதாவது:-

வியாழக்கிழமை அதிகாலை எங்கேயோ ஓர் இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ளப் படையினர் திட்டமிட்டிருந்தனர். இந்த இராணுவ நடவடிக்கை பற்றிய செய்தியை சகல முகாம் வானொலிகளிலும் எதிர்பார்த்திருந்த படையினருக்கு பரந்தன் முகாம் தாக்கப்பட்ட செய்தியையே கேட்க முடிந்தது.

மூவாயிரம் விடுதலைப் புலிகள் கிளிநொச்சியின்மேற்கு — கிழக்குப்பகுதிகளால் ஊடுருவி ஆனையிறவுக்கான தொடர்பைத் துண்டித்து பரந்தனைத் தாக்கினார்கள். பெண் கரும்புலி ஒருவர் டாங்கி மீது பாய்ந்து அதை வெடிக்கச் செய்தார்.

நீரேரி ஊடாக வந்த புலிகள் ஆனையிறவு முகாம் மீது தாக்குதல் நடத்தி அங்கிருந்து பரந்தனுக்கு படைகள் செல்வதைத் தடுத்தனர். ஆனையிறவு மீது தாக்குதல் நடத்தி, ஆனையிறவு முகாமின் குறிப்பிட்ட பகுதிக்குள் நுழைந்து விட்டனர். இந்த நேரத்தில் பரந்தன் மீது தாக்குதல் வெடித்தது.

இதைத்தொடர்ந்து, அன்று ஆரம்பிக்கவிருந்த இராணுவ நடவடிக்கையை ரத்துச் செய்த மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகர உடன் 54 ஆவது படையணியை பரந்தனுக்கு வருமாறு உத்தரவு பிறப்பித்தார்.

பரந்தன், கிளிநொச்சிக்கு தெற்கே சுமார் 5 மைல் தூரத்துக்கு முன்னேறிச் செல்ல அந்தப் படையணி தயாராக இருந்தது.

அதேவேளை —

மட்டக்களப்பு, அம்பாறை காடுகளில் விடுதலைப் புலிகளுக்கு எதிரான நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த — வான் மூலம் இறக்கப்படும் — கொமாண்டோ படையினரைக் கொண்ட படையணி எம்.ஐ. 17பி ஹெலிகள் மூலமாக அவசர அவசரமாக ஆனையிறவில் இறக்கப்பட்டன. இதனால் கிழக்கில் மேற் கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையும் நிறுத்தப்பட்டது.

சாவகச்சேரி, பலாலி இராணுவ முகாம்களில் இருந்து படையினர் வாகனங்கள் மூலமாகவும், ஹெலிகள் மூலமாகவும் ஆனையிறவு முகாமில் குவிக்கப்பட்டனர்.

வியாழக்கிழமை விடியுமுன் இவை நடந்து விட்டன. மறுநாள் பரந்தனில் நிலை கொண்டு ஹெலி இறங்கு தளம் அமைத்த துருப்புக்கள் காயம் அடைந்த படையினரை ஹெலிகள் மூலம் எடுத்துச்சென்று ஆஸ்பத்திரிகளில் அனுமதித்தனர் — இப்படித் தெரிவிக்கப்பட்டது.

(உ-3-150)

## 3 வரிசைகளில் வந்து புலிகள் தாக்கினர்

### தப்பிய சிப்பாய் பேட்டி

''விடுதலைப்புலிகள் எமது நிலைகளை நோக்கி மூன்று வரிசைகளில் வந்தார்கள், முதல் வரிசையில் வந்த பெண்கள் கிரெனேட் தாக்குதலை நடத்தினர்; இரண்டாவது வரிசையில் வந்தவர்கள் மோட்டார் தாக்குதலை நடத்தினர், கடைசி வரிசையில் வந்தவர்களிடம் ஆயுதங்கள் இருக்கவில்லை. அவர்கள் முகாமுக்குள் நுழைந்து பொருள்களை அள்ளுவதில் ஈடுபட்டார்கள்.''

பரந்தன் தாக்குதல் குறித்து அத்தாக்குதலில் காயமடைந்த 4 ஆவது விஜபாகு படையணியைச் சேர்ந்த கோப்ரல் சிறிவர்த்தனா (33 வயது) மேற்கண்டவாறு விவரித்தார். அவர் மேலும் கூறியதாவது:-

அதிகாலை 4.30 மணியளவில் 4 ஆவது பங்கரில் காவல் கடமையில் இருந்தேன். அச்சமயம் ஆயிரக்கணக்கான புலிகள் அங்குள்ள மாமரங்களுக்கு பின்னால் ஒழித்திருந்து அலை அலையாக வந்தனர்; முடிவேயில்லாத அளவில் வந்து கொண்டிருந்தனர்.

மூன்று வரிசைகளில் புலிகள் வந்தது போன்று நாமும் மூன்றுவரிசைகளில்நின்றோம் புலிகளின் தாக்குதலால் முதலாவது வரிசை சின்னா பின்னமாகியது. நான் பதுங்கு குழியில் பதுங்கினேன். மோட்டார்க் குண்டு ஒன்று எனது வயிற்றைப் பதம்பார்த்தது. ஓட்டையாக இருந்த எனது வயிற்றைக் கையால் பிடித்துக் கொண்டு பங்கருக்குள் இருந்தேன். எனது இந்த மாதச் சம்பளப் பணம் முழுவதையும் பங்கருக்குள் விட்டு விட்டேன் — என்றார்.

(உ-3-150)

## இராணுவத் தலைமையகத்துக்கு ஜனாதிபதி விரைந்து சென்றார்

பரந்தன், ஆனையிறவு முகாம் மீதான தாக்குதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைக் கேட்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க உடனடியாக இராணுவத் தலைமையகத்துக்கு விரைந்து சென்றார். அங்கு பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்தையுடன் இணைந்து படையினருக்கு உடனுக்குடன் உத்தரவுகளைப் பிறப்பித்துக் கொண்டிருந்தார் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்திகள் தெரிவித்தன.

ஒருமாத கால இடைவெளிக்குள் ஜனாதிபதி இராணுவத் தலைமையகத்துக்கு சென்றது இது இரண்டாவது தடவையாகும்.

டிசம்பர் 7 ஆம் திகதி பம்பைமடுவில் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் மற்றும் இராணுவத்தளபதி, பொலீஸ் மா அதிபர் சென்ற ஹெலி இறங்கிய சமயமும் ஜனாதிபதி இராணுவ தலைமையகத்துக்கு விரைந்து சென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(உ-3-150)

# புலிகளின் சிறிய கொமாண்டோ அணிகள் ஆட்லறிகளை அழிக்க முகாமுள் நுழையலாம்

### பரந்தன் தாக்குதல் அதனை உணர்த்தியுள்ளது

கொழும்பு, ஜன. 13

சிறிய கொமாண்டோ அணி முகாமுக்குள் நுழைந்து ஆட்டிலறிகளை அழிக்கும் சாத்தியத்தை பரந்தன் தாக்குதல் யதார்த்தமாக உணர்த்தியுள்ளது. பெண் கரும்புலி ஒருவர் மனிதக் குண்டுடன் என். டி. ரி. டாங்கி மீது பாய்ந்து அதை நிர்மூலமாக்கியதுடன் பரந்தன் சமர் வெடித்தது என்று பேச்சடிபடுகிறது. ஆனால் இந்தப் பேச்சு ஊர்ஜிதமாகவில்லை.

''த ஐலண்ட்'' பத்திரிகையின் ஞாயிறு இதழின் அதன் பாதுகாப்புச் செய்தியாளர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

பரந்தன் தாக்குதலில் 25 சிப்பாய்களைக் காணவில்லை. தற்போது 142 படையினரின் சடலங்கள் கைப்பற்றப் பட்டுள்ளன. இறந்த படையினரின் எண்ணிக்கை 170 ஆக உயரலாம். 355 படையினர் காயமடைந்துள்ளனர்.

புலிகள் தரப்பில் 20 தளபதிகள் உட்பட 140 பேர் இறந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர். ஆனால் இது 170 ஆக உயரலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

பரந்தனில் இருந்து 54 ஆவது படைப்பிரிவு விலக்காதிருந்தால் புலிகளால் பரந்தனைத் தாக்கியிருக்க முடியாது. தாக்குதல் நடத்திய புலிகள் இன்னமும் ஆனையிறவு - கிளிநொச்சி நெடுஞ்சாலையில் பதுங்கி இருப்பதாகக்கூறப்படுகிறது.

நீண்டதூர ஆட்டிலறி துப்பாக்கிகள் ஒன்பதையும், பெருந்தொகையான ஷெல்களையும் இழந்தமையை படையினர் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள்.

120 எம். எம்., 122 எம். எம்., 133 எம். எம். ரக ஆட்டிலறிகள் அழிக்கப்பட்டுள்ளன. 120 எம். எம். ஆட்டிலறிகளை புலிகள் எடுத்துச் சென்றுள்ளார்கள் என்பதைப் படையினர் மறுத்தனர்.

50 கலிபர் துப்பாக்கிகளை விடுதலைப்புலிகள் எடுத்துச் சென்றுள்ளார்கள் என்பதை படை வட்டாரங்கள் மறுக்கவில்லை. விமான எதிர்ப்பு திறன் வாய்ந்த துப்பாக்கிகள் அவை என்று கூறப்பட்டது. 133 எம். எம். ஆட்டிலறி துப்பாக்கிகள் 27 கிலோ மீற்றர் தூர வீச்சுக் கொண்டவை. சீனத் தயாரிப்பான இத்தகைய துப்பாக்கிகள் தான் படையினரிடம் உள்ள ஆகக் கூடிய வலுக் கொண்டவையாகும். இத்தகைய ஆட்டிலறிகள் எத்தனை அழிக்கப்பட்டன என்ற தகவலை பாதுகாப்புப் படை வட்டாரங்கள் வெளியிடவில்லை.

122 எம். எம். ஆட்டிலறிகள் 15 கிலோ மீற்றரும், 120 எம். எம். ஆட்டிலறிகள் 6 கிலோ மீற்றரும் வீச்சுக் கொண்டவை. இத்தகைய ஆட்டிலறிகளை புலிகள் கைப்பற்றியிருந்தால், பொதுமக்களுக்கும், படைகளுக்கும் பெரும் சேதம் ஏற்படலாம்.

முல்லைத்தீவு, புளுக்குணாவ முகாம்களில் இருந்து புலிகள் இத்தகைய ஆட்டிலறிகளைக் கைப்பற்றியிருந்தார்கள்.

ஆட்டிலறி ஆயுதங்கள் நிலைகொள்ளும் முறைகளில் இனிமேல் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும். அப்போதுதான் அவற்றைப் பாதுகாக்க முடியும் என்று பாதுகாப்பு வட்டாரங்கள் கூறுகின்றன.

மல்லாவி ஆஸ்பத்திரியில் காயமடைந்த புலிகள் அல்லது படையினர் அனுமதிக்கப்படவில்லை என்று அங்கு பணியாற்றும் எம்.எஸ்.எவ். வைத்தியகுழுவினர் தெரிவித்தனர்.

படையினரின் 27 சடலங்களை புலிகள் ஒப்படைக்க இருப்பதாக வெளிவந்த செய்திகளை செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஊர்ஜிதப் படுத்தவும் இல்லை; மறுக்கவும் இல்லை.

பரந்தன் தாக்குதலில் 2 அல்லது 3 பட்டாலியன்களின் துருப்புக்களுக்கு கணிசமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

பூநகரியில் நிலை கொண்டு இருந்த 10 ஆவது பிரிகேட் பரந்தனில் தற்போது நிலை கொண்டிருந்தது. இந்த பிரிகேட் வந்தபின்பே அங்கு நிலை கொண்டிருந்த 54 ஆவது படையணி வேறு இடத்துக்குப் போனது — என்று மேலும் தெரிவிக்கப்பட்டது. (உ-3-150)

### நாளை

**தை 1**

செவ்வாய்க்கிழமை

திதி: ஷஷ்டி

முன் இரவு 9 49 வரை.

நட்சத்திரம்: உத்தரட்டாதி

பின் இரவு 4 40 வரை.

தைப்பொங்கல்

ஷஷ்டி விரதம்

ராகுகாலம்: 3.34-5.04

சுபநேரம்: 11.04 12.34

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## கிழக்கில் தேடுதல்

மட்டக்களப்பு கல்லடி, நாவற்குடா பகுதியில் நேற்று முன்தினம் படையினர் சுற்றி வளைத்துத் தேடுதல் நடத்தினர்.

படையினரின் வாகனங்கள் நெற்பயிர்கள் வளர்ந்திருந்த வயல்கள் ஊடாக சென்றதால் பெரும் சேதம் ஏற்பட்டதாக தெரிவிக்கப்பட்டது.

தேடுதலின் போது சில இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர்.

அதே நேரம் மட்டக்களப்பு திருப்பெருந்துறை வீதியிலும் இராணுவத்தினர் தேடுதல் நடத்தினர். (உ-3-150)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு 1 வகுப்புக்கு அனுமதி:

# தற்போதைய முறையில் மாற்றம் ஏதும் இல்லை

## அமைச்சர் பத்திரான தகவல்

கொழும்பு, ஜன. 13

பிரபல பாடசாலைகளில் ஆண்டு ஒன்று வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கு ''லொத்தர்'' முறையைக் கடைப்பிடிப்பது குறித்து ஆலோசிக்கப்படுவதாக பத்திரிகைகளில் வெளியான செய்திகளில் உண்மை எதுவுமில்லை என்று கல்வி, உயர்கல்வி அமைச்சர் ரிச்சர்ட் பத்திரான தெரிவித்தார்.

அதிர்ஷ்டசீட்டிழுப்பு மூலம் ஆண்டு ஒன்று வகுப்புக்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் என சிங்களப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டிருந்த போதிலும் அச்செய்தியில் உண்மை எதுவுமில்லை எனவும் —

மாணவர்களைச் சேர்ப்பதில் தற்போது அனுசரிக்கப்பட்டு வரும் நடைமுறையில் மாற்றங்கள் எதுவும் இல்லை எனவும் —

அமைச்சர் பத்திரான தெரிவித்திருந்தார்.

பிரபல பாடசாலைகளில் மாணவர்களின் எண்ணிக்கையை 2 ஆயிரமாக மட்டுப்படுத்துவது குறித்து ஆராயப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.


வடபிராந்திய

## யாழ். ஆங்கில மருந்து வணிகர் மன்றம்

## அவசர அறிவித்தல்

அன்புடையீர்!

எமது மன்றத்தினரால் அரசாங்க மருந்துக் கூட்டு ஸ்தாபனத்திலிருந்து (S.P.C.) ஒரு தொகுதி மருந்து ஆகாயமார்க்கமாக தருவிக்கப்பட்டுள்ளது. இம்மருந்துகள் உடன் விநியோகம் செய்யப்படவுள்ளதால், 3 நாள்களுக்குள் அனைத்து மருந்தகங்களும் தங்கள் பதிவுகளை மேற்கொண்டால் வந்த மருந்துப் பொருள்களை சமமாகப் பிரித்துக் கொடுப்பதற்கு இலகுவாக விருக்கும். **இம்மருந்துகள் கொழும்பு S.P.C. யின் மொத்த விலைக்கே வழங்கப்படவுள்ளன.**

குறிப்பு:

1997—01—15 ஆம் திகதிக்குள் உறுதிப்படுத்திக் கொள்ளவும். இத்திகதிக்குப் பிந்திய எவையும் பங்கீட்டில் இடம் பெறமாட்டா. அடையாள அட்டை வழங்குவதற்காக முத்திரை அளவுடையதான இரண்டு படங்களையும் எமது பணிமனையில் ஒப்படைக்கவும்.

நன்றி!

**தலைவர் -- செயலாளர்**

470, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம். (சி/3916)



## மரண அறிவித்தல்

### சங்கரப்பிள்ளை செல்லையா

**(சிங்கப்பூர் போசனசாலை ஸ்தாபகர்)**

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை செல்லையா நேற்று (12-01-97) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை - தையல்முத்து ஆகியோரின் அன்பு மகனும், காலஞ்சென்ற குமரேசு - இளையபிள்ளை தம்பதிகளின் மருமகனும், திருமதி செல்லம்மாவின் அன்புக் கணவரும், கனகலிங்கம் (சிங்கப்பூர் போசனசாலை), காலஞ்சென்ற ஜெயலட்சுமி (ஜேர்மனி) மற்றும் குணரட்ணம் (ஜேர்மனி), இந்திராணி (ஜேர்மனி), சறோஜினிதேவி (ஜேர்மனி), சாந்தகுமாரி (ஜேர்மனி), கோணேஸ்வரி (ஜேர்மனி), பிறேமகுமாரி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கிருபானந்தன், விஜயராசா, குலேந்திரன், வெற்றிவேல்பிள்ளை, யோகசுந்தரம், சிவகரன், கமலாம்பிகை, தனலட்சுமி ஆகியோரின் மாமனாரும், காலஞ்சென்ற செல்லத்தங்கம், அன்னம்மா, பூமணி, சிவக்கொழுந்து ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் இன்று (13-01-97) பிற்பகல் 1-00 மணி (பழையநேரம்) அளவில் திருநெல்வேலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டுத் தகனம் செய்யப்படும்.

தகவல்:

**செ. கனகலிங்கம்** (மகன்)
**செ. செல்லம்மா** (மனைவி)

செ. கனகலிங்கம்,
அரசடி அம்மன் றோட்,
திருநெல்வேலி வடக்கு. (44666)


**மேலும் மரண அறிவித்தல்கள் 2 ஆம் பக்கத்தில்**

பரந்தன் தாக்குதலின் மூலம்

# போர் உத்தியை மாற்றவேண்டிய தேவை உணர்த்தப்பட்டிருக்கிறது

கொழும்பு, ஜன. 13

பரந்தன் தாக்குதலின் மூலம் போர் உத்தியை மாற்றவேண்டிய தேவை படை உயர்மட்டத்துக்கு உணர்த்தப்பட்டுள்ளது எனக் கொழும்பு தமிழ்ப்பத்திரிகை ஒன்று கருத்து வெளியிட்டுள்ளது.

வடக்கில் கைப்பற்றிய பகுதிகளைத் தொடர்ந்து தக்கவைப்பதிலும், கிழக்கில் புலிகளைப் பலவீனப்படுத்துவதிலும் அரச படைகள் சவால்களை எதிர்நோக்கி உள்ளன.

ஆனையிறவில் இருந்து வவுனியா வரை தரைப் பாதை ஒன்றைத் திறக்க முயற்சி எடுக்கப்பட்ட சமயம் பரந்தன் தாக்குதல் இடம்பெற்றுள்ளது. பாதை திறக்கும் தாக்குதல் யோசனைக்கு நெருக்குதல் கொடுக்கும் வகையில் பரந்தன் தாக்குதல் இடம்பெற்றுள்ளது.

பரந்தன் தாக்குதல் மூலம் ஏககாலத்தில் இரு விடயங்களை நிலைநிறுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

ஒன்று வவுனியா நோக்கிய இராணுவ நடவடிக்கையை நிறுத்தச் செய்தல். மற்றையது அடிமட்ட இராணுவத்தினரின் மனதைப் பாதிப்படையச் செய்தல்.

இந்த இரு விடயங்களிலும் புலிகள் வெற்றி பெற்றுள்ளனர் — என்று பெயர் குறிப்பிட விரும்பாத மேற்கு நாட்டு ராஜதந்திரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை மேலும் தெரிவித்தது. (உ-3-150)

# தனிஈழம் வேண்டுமென்று தமிழக அரசு வற்புறுத்தாது

## முதல்வர் கருணாநிதி அறிவிப்பு

சென்னை, ஜன. 13

இலங்கைத் தமிழர்களுக்குத் தனி ஈழம் வேண்டும் என்று தமிழக அரசு வற்புறுத்தாது. இது விடயத்தில் நாம் மிகவும் தெளிவாக உள்ளோம்.

இவ்வாறு தமிழக முதல்வர் மு. கருணாநிதி நேற்றுத் தெரிவித்தார்.

கோவையில் செய்தியாளர்களின் கேள்விகளுக்குப் பதிலளித்த போதே அவர் இப்படிச் சொன்னார்.

''இந்த முடிவை நாம் நெடுநாளைக்கு முன்னரே எடுத்துவிட்டோம். எனினும் இலங்கை வாழ் தமிழருக்கு சுய அதிகாரம் கொண்ட மாநிலம் ஒன்று கிடைத்தால் எமக்கு மகிழ்ச்சியாக இருக்கும்'' — என்றும் அவர் கூறினார்.

இலங்கையில் இருந்து தமிழகம் வரும் அகதிகளின் எண்ணிக்கை குறைந்துள்ளதாகவும் அவர் சொன்னார். (அ-4-3)

### கௌடாவின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

கண்காணிக்க முடிவு செய்யப்பட்டது.

புலிகள் தமது ஆயுதக் கடத்தலுக்கு கர்நாடகத்தை இடைத் தரிப்பிடமாகப் பயன்படுத்தலாம் என்று அந்த மாநாட்டில் கூறப்பட்டது.

அண்மையில் பெங்களூரில் நடந்த மாநாடு ஒன்றில் புலிகளுக்கு ஆதரவான கருத்துக்கள் பரிமாறப்பட்டதைக் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் மாநாட்டில் சுட்டிக் காட்டப்பட்டதாம். (உ-3-150)

### ஈழத் தமிழர்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்றும் அவர் கோரினார்.

ராஜீவ் காந்தியை கொலை செய்ததாகக் கூறி விடுதலைப் புலிகள் மீது தடை விதித்தது நியாயமற்ற செயலாகும் என்றும்—

அப்படியாயின் இந்திரா காந்தியை கொலை செய்த சீக்கிய இயக்கத்தையும், காந்தியை கொலை செய்த ஆர். எஸ். எஸ். அமைப்பையும் ஏன் தடை செய்யவில்லை என்றும்— அவர் கேள்வி எழுப்பி உள்ளார். (உ-3-150)

### பேச்சுக்கு...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களின் பங்களிப்பு இல்லாது தீர்வு காணப்பட்டாலும், அந்தத் தீர்வு எழுத்துருவில் மட்டுமேயிருக்கும். அதனை நடைமுறைக்குக் கொண்டுவர முடியாது. ஆகவே விடுதலைப் புலிகளுடன் அரசு உடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டியது அவசியம் — என்று கூறினர்.

அமைச்சர் அஷ்ரப்பும் ஈ.பி.டி.பி. தலைவர் டக்ளஸ் தேவானந்தாவும் பேசுகையில், விடுதலைப்புலிகளை பேச்சுக்குக் கொண்டு வர வேண்டும் என்று தெரிவித்தனர்.

பேச்சுக்கு வருமாறு புலிகளை சகல அரசியல் கட்சிகளும் கூட்டாகக் கோர வேண்டும் என்ற யோசனையும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த யோசனை குறித்து அமைச்சர் பீரிஸ் கருத்துக் கூறுகையில் —

நாடாளுமன்றத் தெரிவுக் குழுவில் விவாதம் நடக்க வேண்டும்; அதே நேரத்தில் விடுதலைப் புலிகளுடன் பேச்சும் நடத்தலாம். இரண்டும் சமாந்தரமாக நடக்க வேண்டும். விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த வேண்டும் என்ற அரசியல் கட்சிகளின் கோரிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கிறேன் — என்றார். (உ-150-3)

பம்பைமடுச் சம்பவம்

# ஹெலி விமானி மீது ஒழுங்கு நடவடிக்கை!

கொழும்பு, ஜன. 13

பம்பைமடுப் பகுதியில் ஹெலி இறக்கிய சம்பவம் தொடர்பாக விசாரணை செய்து வந்த 3 பேர் கொண்டகுழு அந்தக் ஹெலியின் விமானி மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க சிபார்சு செய்துள்ளது.

விசாரணை அறிக்கை விமானப்படைத் தளபதி ஒலிவர் ரணசிங்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குழுவின் சிபார்சையடுத்து, அந்த ஹெலியின் விமானி பணியில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளார்.

ஹெலி விமானப்படைத் தலைமையகத்துடன் தொடர்புகளை இழந்தபின் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகளை விமானி கடைப்பிடிக்கவில்லை என்று குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஹெலியின் உபகரணங்கள் பழுதடைந்ததால் அருகில் இருந்த விமான நிலையத்துடன் தொடர்பு கொள்ளவில்லை என்று விமானி தனது சாட்சியத்தில் தெரிவித்திருந்தார்.

ஆனால் இராணுவத் தளபதி றோஹான் தலுவத்த ஹெலியின் உபகரணங்கள் இயங்கக் கூடிய நிலையில் இருந்ததாக தான் நம்புவதாகக் கூறியிருந்தார்.

விமானப் படைத்தளபதி ஒலிவர் ரணசிங்க விசாரணைக் குழுவின் அறிக்கையை பாதுகாப்பு அமைச்சிடம் கையளித்துள்ளார். (உ-3-150)

### விடுதலைப்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

லங்களின் நிலைகளை சென்று பார்த்து வருமாறு அவர்கள் கூறினர்.

சனிக்கிழமை பி.ப. 3. 30 மணியளவில் நான் புறப்பட்டுச் சென்றேன். இரவு 9 மணியளவில் சடலங்களைப் பார்வையிட்டேன். சடலங்களை புலிகள் பிரேதப் பெட்டிகளில் வைத்து ஆயத்தமாக இருந்தார்கள்.

29 சடலங்களில் 2 சடலங்களை பார்க்க முடியாததினால் 27 சடலங்களைப் பொறுப்பேற்றேன். ஒரு லொறியில் 14 சடலங்களும் மற்றைய லொறியில் 13 சடலங்களும் ஏற்றப்பட்டன. லொறிகளுக்கு எனது வாகனம் பாதுகாப்பளித்தது.

அதிகாலை 2-30 மணிக்கு நொச்சிமோட்டை பாலத்துக்கு வந்தேன். காலையில் இராணுவத்தினருடன் தொடர்பு கொண்டேன். என்னை வவுனியாவில் 'ரம்யா' இல்லத்தில் உள்ள இராணுவத் தளத்துக்கு கூட்டிப் போய் பேச்சு நடத்தினார்கள்; சடலங்களைப் பார்க்காமலேயே அவற்றை ஏற்க மறுத்து விட்டார்கள்.

சடலங்களை அடையாளம் காணமுடியாது என அவர்கள் கூறமுடியாது. ஏனெனில் சடலங்களில் சீருடைகளும் சப்பாத்துகளும் கூட அகற்றப்படவில்லை. ஆனால் இராணுவத்தினர் கழுத்தில் அணியும் 'ராக்' இருக்கவில்லை.

சடலங்களைப் பார்வையிடாமலேயே அவர்கள் இந்த முடிவை எடுத்ததையிட்டு நான் மனம் வருந்துகிறேன்.

சடலங்களை புலிகளிடம் திருப்பி ஒப்படைப்பது அழகற்றது என்பதால் ஓமந்தைச் செஞ்சிலுவைக் கிளை ஊடாக அவற்றை தகனம் செய்ய ஏற்பாடு செய்தேன் — என்றார். (உ-4)

### முறைகேட்டில்..,

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலுவத்தவின் ஏற்பாட்டில் இராணுவ அணி ஒன்று கடுகண்ணாவையில் பதுங்கிருந்தது.

இந்தப் பொருள்களுடன் சென்ற லொறியை அவர்கள் கைப்பற்றியதுடன் அந்த லொறியின் சாரதியையும் கைது செய்தனர்.

இது குறித்து விசாரணை செய்ய இருவர் கொண்ட குழுவை இராணுவ தளபதி நியமித்துள்ளார்.

வெளிநாட்டுக்குச் செல்லவிருந்த அந்தப் பிரிகேடியரின் வெளிநாட்டு விஜயத்தை ரத்துச் செய்த இராணுவத் தளபதி, அவரை ஓர் இடத்தில் தங்கியிருக்க உத்தரவிட்டுள்ளார் — என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-3-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 2[illegible] இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-01-1997 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org